Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 08 சுபகிருது வருடம், ஆனி மாதம் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(01.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 01, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## பஸ் கட்டணங்கள் 22 வீதத்தால் உயர்வு

குறைந்தபட்ச கட்டணம் 40 ரூபா

02 பக்கம்

## வீதியோரம் தொங்கவிடப்பட்ட ஓட்டோ!



எரிபொருளைத் திருடுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாக தெரிவித்து முச்சக்கரவண்டி ஒன்றை பொதுமக்கள் இணைந்து மின்கம்பத்தில் தொங்கவிட்டுள்ளனர்.

இராஜகிரிய, ஒபேசேகர புர பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

படப்பிடிப்பு : கிரிஷான் காரியவசம்

# முழு நாடும் முடக்கம்!

- அரச நிர்வாக இயந்திரம் செயலிழப்பு
- வைத்தியசாலைகள் முடங்கின; சத்திரசிகிச்சைகளுக்கு ஆபத்து
- 26 ரயில் சேவைகள் இடைநிறுத்தம்
- 90 வீத மரக்கறி விநியோகம் பாதிப்பு
- 7 இலட்சம் சிறிய நடுத்தர நிறுவனங்கள் மூடல்
- கடற்றொழில், தேயிலை, இறப்பர் துறை மந்தநிலையில்

•நமது விசேட செய்தியாளர்

எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளதன் காரணமாக நாடு முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளதுடன், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசிய துறைகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வைத்தியசாலைகள் பலவற்றின் சேவைகள் முடங்கியுள்ளன. குறிப்பாக, வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்கள் நேரத்துக்கு சமுகமளிக்க முடியாமையால் சத்திரசிகிச்சைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், நாடு முழுவதிலும் திட்டமிடப்பட்டிருந்த இரத்ததான முகாம்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் சத்திரசிகிச்சைகளுக்குத் தேவையான இரத்தத்தை பெற்றுக்கொடுக்க முடியாதுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதனால், கர்ப்பிணிப் பெண்கள், விபத்துகளால் காயமுற்று சேர்க்கப்படுபவர்கள் ஆகியோருக்கு திட்டமிட்ட வகையில் சிகிச்சைகளைப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

### அரச இயந்திரம் செயலிழப்பு

எதிர்வரும் 10ஆம் திகதிவரை மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் அரசாங்க ஊழியர்களை அழைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதால் பல்வேறு அரச பணிகள் முடங்கியுள்ளன.

02 பக்கம்

## எரிவாயு கொள்வனவுக்கு ஒப்பந்தம் செய்தது லிட்ரோ



1,00,000 இலட்சம் மெட்ரிக் தொன் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கான உலக வங்கியுடனான ஒப்பந்தத்தில், லிட்ரோ நிறுவனம் சார்பில் அதன் தலைவர் முதித்த பீரிஸ் நேற்று கைச்சாத்திட்டுள்ளார்.

இவ்வாறு பெறப்படவுள்ள 1,00,000 மெட்ரிக் தொன் எரிவாயுவின் பெறுமதி 90 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும், அதற்கு உலக வங்கி 70 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதுடன், மீதமுள்ள 20 மில்லியன் அமெரிக்க டொலர் லிட்ரோ நிறுவனத்தால் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## எரிபொருளுக்காக கோட்டா அரசு அந்தர் பல்டி:

### கட்டார் அறக்கட்டளை மீதான தடை நீக்கம்

02 பக்கம்

## 3.2 மில்லியன் குடும்பங்களுக்கு ஆறு மாதங்களுக்கு ரூ.7,500

### அரச நிவாரணம் என்கிறார் அமைச்சர் ரமேஷ் பத்திரண



பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள 3.2 மில்லியன் குடும்பங்களுக்கு இன்று தொடக்கம் ஆறு மாத காலத்துக்கு அதிகபட்சமாக ரூ.7,500 கொடுப்பனவை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும்.

02 பக்கம்

## சுற்றுலாப்பயணிகள் மாட்டுவண்டியில்...



நாட்டில் தற்பொழுது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அம்பாறை மாவட்டத்தில் பிரசித்திபெற்ற சுற்றுலாப் பிரதேசமான பொத்துவில், அறுகம்பை பிரதேசத்தில் மாட்டுவண்டியில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் செல்வதை படத்தில் காணலாம். (எம்.என்.எம்.அப்ராஸ்)

## பாடசாலை மாணவர்களுக்கு 6 மாதங்களுக்கு உணவு

### வழங்க சீனா ஏற்பாடு

இலங்கையின் பாடசாலை மாணவர்களுக்காக 1000 மெட்ரிக் தொன் அரிசியை கல்வி அமைச்சுக்கு சீனா வழங்கியுள்ளது.

7,900 பாடசாலைகளின் 11 இலட்சம் மாணவர்களுக்கு 06 மாத காலத்திற்கு உணவு வழங்குவதற்கு சீன அரசு திட்டமிட்டுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்திற்காக மேலும் இரண்டு தொகுதி அரிசி எதிர்வரும் இரண்டு வாரங்களில் கிடைக்கவுள்ளது.

**இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் ஹஜ் பெருநாளை ஜுலை 10ஆம் திகதி கொண்டாடலாம் என கொழும்பு பெரியபள்ளிவாசல் நேற்றிரவு அறிவித்தது.**

## 46 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டனர்

### அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக சென்றனராம்

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முயன்றபோது கைதுசெய்யப்பட்ட 46 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

குறித்த குழுவினர் நேற்று பிற்பகல் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் சிலாபத்தில் வசிப்பவர்கள் என்பதுடன், ஐந்து வயதுக்குட்பட்ட இரண்டு குழந்தைகளும் குழுவில் உள்ளனர்.

நேற்றுக்காலை 8.40 மணிக்கு விமானத்தில் கொக்கோஸ் தீவிலிருந்து இலங்கையர்கள் குழு நாடு கடத்தப்பட்டுள்ளது.

02 பக்கம்

## 22ஆவது திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியீடு

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ இந்த சட்டமூலத்தை அண்மையில் அமைச்சரவையில் சமர்ப்பித்ததையடுத்து, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ள சட்டமூலம் எதிர்வரும் நாட்களில் நாடாளுமன்ற அனுமதிக்காக முன்வைக்கப்படவுள்ளது.

## உஷ்



**அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில விடயங்கள் தொடர்பில் அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோவும் மனுஷ நாணயக்காரவும் கடும் அதிருப்தியில் இருப்பதாக உள்ளக தகவல்கள் சொல்கின்றன.**

**அவர்கள் கூறிய பரிந்துரைகளை நீதியமைச்சர் சேர்க்கவில்லை என்பதே அவர்களின் கவலை. அநேகமாக 22ஆவது திருத்தம் கிடப்பில் போடப்படுமென பேசப்படுகிறது.**

## மாத்தறை படுகொலை வழக்கு: 6 பேருக்குத் தூக்குத்தண்டனை

மாத்தறையில் 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒரு படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 06 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மேல் நீதிமன்றத்தால் குறித்த 06 பேருக்கும் இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய மக்கள் சக்தி பாரிய போராட்டம்

02 பக்கம்



படப்பிடிப்பு : கிரிஷான் காரியவசம்

## கமெண்ட் கந்தர்..

**இங்க ஞானசார தேரர் செயலணி அறிக்கையை கையளிக்கிறார்..**
**அங்க இஸ்லாமிய நாடுகளிட்ட கையேந்திக்கொண்டிருக்குது அரசாங்கம்..**
**ஹராம் எல்லாம் ஹலாலா போச்சு போல...**



# கொள்ளையடிக்கப்பட்ட 3 கோடி 15இலட்சம் பெறுமதியான தங்க நகைகள் மீட்பு: பெண் ஒருவர் உட்பட நால்வர் கைது




(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெஞ்சர் தோட்ட மேற்பிரிவில், சுமார் 3 கோடி 15 இலட்சம் பெறுமதியுடைய ஒன்றரை கிலோ மதிப்புடைய தங்கத்தை நேற்று பொலிஸார் மீட்டுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடையதாக பெண் ஒருவர் உட்பட நால்வரை கைது செய்துள்ளனர்.

நோர்வூட் பொலிஸாரும் குற்றத்தடுப்புப் பிரிவினரும் இணைந்து நடத்திய தேடுதலின் போதே இத்தொகை தங்கம் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நோர்வூட் நகரில் உள்ள நகைக்கடையொன்றில் 2021ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் திகதியளவில் ஒரு தொகை நகை கொள்ளையடிக்கப்பட்டதாக நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் உரிமையாளர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து, குறித்த கடையில் சுமார் 10 வருடங்களாக வேலை செய்த பெண்ணொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவரது கைரேகை அடையாளங்களும் பதிவு செய்யப்பட்டன.

இதனையடுத்து, கடந்த ஆறுமாத காலப்பகுதியில் தொடர்ச்சியாக விசாரணைகளையும் தேடுதல்களையும் மேற்கொண்டு வந்த நோர்வூட் பொலிஸார் மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்றையதினம் குறித்த நகைகளை மீட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் பெண்ணொருவர் உட்பட நால்வரை கைது செய்துள்ளனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்திய பெண்ணின் கைரேகையும் மீட்கப்பட்ட பொருட்களில் உள்ள கைரேகையும் ஒரே மாதிரியானவை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தங்கச்சங்கிலி, தோடு, மாலை என பலதரப்பட்ட நகைகளே இதன்போது மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கும் நோர்வூட் பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை பெற அரசு தயங்குவது ஏன்?

## ஐயந்த சமரவீர எம்.பி. கேள்வி

ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் எரிபொருளை பெற்றுக்கொள்ள அரசாங்கம் தவறியது ஏன் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், பிரதமர் தீர்வை பெறாமல் நெருக்கடி நிலை தொடர்பில் வெறும் கருத்துகளை வெளியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

இந்தியாவும் கூட ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை பெற்று, இலங்கைக்கு அதிக விலைக்கு பங்குகளை விற்பது அனைவரும் அறிந்ததே என நாடாளுமன்ற உறுப்பினர் சமரவீர தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடமிருந்து எரிபொருளைப் பெறுவது சாத்தியமாகும். ஆனால், பிரதமர் அதற்குப் பதிலாக வரும் வாரங்கள் கடினமாக இருக்கும் என்று அறிக்கைகளை வெளியிடுகிறார்.

சாத்தியமான தீர்வுகளை வழங்காமல் பிரதமர் இவ்வாறான கருத்துகளை வெளியிடும்போது, பொதுமக்கள் தொடர்ந்தும் வரிசையில் நிற்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் அடிமை தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதை உறுதி செய்ய பிரதமர் நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வெளிநாட்டு நாணயங்களை நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கான நம்பிக்கையை வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு நம்பிக்கைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

ஒரு வெளிநாட்டவர் மாதந்தோறும் 100 அமெரிக்க டொலர்களை அனுப்பினால், எரிபொருள், மருந்து மற்றும் உரங்களை இறக்குமதி செய்வதற்கு போதுமான இருப்புகள் கிடைக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சமரவீர மேலும் கூறுகையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை இராஜதந்திர வழிகளில் ரஷ்யாவிற்கு விளக்கினால், ரஷ்யா ஆதரவளிக்க தயங்காது என்றார்.

### 46 இலங்கையர்கள்...

விமானத்தில் 100 அவுஸ்திரேலிய பாதுகாப்பு அதிகாரிகளும் இருந்தனர்.

இதனையடுத்து, 46 இலங்கையர்களும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### பஸ் கட்டணங்கள்...

நேற்று நள்ளிரவு முதல் பஸ் கட்டணம் 22 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அறிக்கையின்படி, குறைந்தபட்ச பஸ் கட்டணம் ரூ. 32 இலிருந்து ரூ. 40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து தெரிவித்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், அண்மைய எரிபொருள் அதிகரிப்பைத் தொடர்ந்து கட்டண திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பஸ் கட்டணத்தை மாற்றியமைக்கும்போது மேலும் பல காரணிகளும் பரிசீலிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

அனைத்து இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள், தனியார் பஸ்கள் மற்றும் நகரங்களுக்கிடையிலான மற்றும் அரை சொகுசு பஸ் சேவைகளுக்கு இந்த கட்டண திருத்தம் பொருந்தும் என குறிப்பிட்டார்.

செவ்வாய்க்கிழமை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் தனியார் பஸ் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், பஸ் கட்டண திருத்தம் தொடர்பில் உடன்பாடு எட்டப்படாமல் முடிவடைந்தது.

பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, அண்மைய எரிபொருள் விலை திருத்தம் காரணமாக 30சதவீத பஸ் கட்டணத்தை உயர்த்துமாறு பஸ் சங்கங்கள் கோரிக்கை விடுத்தன.

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

# முல்லைத்தீவில் பாடசாலை மாணவிகள் துஷ்பிரயோகம்: ஆசிரியர் மீது மேலும் இரண்டு வழக்குகள் தாக்கல்

முல்லைத்தீவில் பாடசாலை மாணவிகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஆசிரியரின் விளக்கமறியல் உத்தரவு தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதவான் வு.சரவணராஜா முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, சந்தேகநபர் காணொளி தொழில்நுட்பத்தினூடாக நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் 06 மாணவிகளிடம் வாக்குமூலம் பெறப்பட்டதுடன், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட சட்ட மருத்துவ பரிசோதனையில், இரண்டு மாணவிகள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், 13 மற்றும் 17 வயதான மாணவிகளே துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதவானிடம் அறிவித்துள்ளனர்.

அதற்கமைய, சந்தேகநபரான ஆசிரியருக்கு எதிராக மேலும் இரண்டு வழக்குகள் நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவை சேர்ந்த 28 வயதான ஆசிரியர் ஒருவரே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆசிரியருக்கு உதவிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த மாணவர் ஒருவருக்கு நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மாணவிகளிடம் மேலும் வாக்குமூலம் பெறப்படவுள்ளதால், சந்தேகநபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவில் மேலதிக வகுப்புகளை நடத்தும் ஆசிரியர் ஒருவர், திட்டமிட்ட வகையில் பாடசாலை மாணவிகளை அச்சுறுத்தி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

மாணவர்கள், மாணவிகள் மத்தியில் காதல் தொடர்புகளை ஏற்படுத்தும் வகையிலான சூழலை ஆசிரியர் உருவாக்கியமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மாணவிகளின் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை ஆறு மாணவர்கள் ஊடாக சந்தேகநபரான ஆசிரியர் பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்த புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை மாணவிகளிடம் காண்பித்து அவர்களை சந்தேகநபர் அச்சுறுத்தியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு அச்சுறுத்தலுக்கு இலக்கான மாணவிகளை சந்தேகநபர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ள நிலையில், அவர்களில் ஒரு மாணவி கடந்த வாரம் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கு அமைய இந்த சம்பவம் தொடர்பிலான தகவல்கள் வெளிக்கொணரப்பட்டன.

குறித்த ஆசிரியர் மூன்று வருடங்களாக மாணவிகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி வந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஐக்கிய மக்கள் சக்தி...

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைக்கு உடனடி தீர்வு கோரியும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்டோர் உடனடியாக பதவி விலகவேண்டும் என வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தியினரால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. "கோட்டா - ரணில் சாபத்திற்கு முடிவு கட்டுவோம்" என்ற தொனிப்பொருளிலே இப்போராட்டமானது கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.








படப்பிடிப்பு : கிரிஷான் காரியவசம்

### எரிவாயு கொள்வனவுக்கு...

இந்த எரிவாயு கையிருப்பு சுமார் நான்கு மாத காலத்திற்கு நாட்டின் பாவனைக்கு போதுமானது எனவும் தெரிவிக்கப்படுகிறது. எரிவாயு கையிருப்பில் 70% வீட்டுப்பாவனை நுகர்வுக்காக வழங்கப்படும் என்றும் இதில் 12.5 கிலோ கொண்ட 5 மில்லியன் கொள்கலன்களும், 5 கிலோ எடைகொண்ட ஒரு மில்லியன் கொள்கலன்கள் மற்றும் 2.3 கிலோ கொண்ட ஒரு மில்லியன் கொள்கலன்களையும் பெற்றுக் கொள்ள மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளது. அத்துடன், எஞ்சிய 30% எரிவாயு கையிருப்பு வணிக பயன்பாட்டிற்காக வழங்கப்படவுள்ளது.

மேலும், 20 மில்லியன் டொலர் செலவில் லிட்ரோ நிறுவனத்தால் பெறப்பட்ட 33,000 மெட்ரிக் தொன் எரிவாயுவின் முதல் தொகுதி ஜூலை முதல் வாரத்தில் இலங்கையை வந்தடையும் என்றும், அதன் பின்னர் அவற்றை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

### 3.2 மில்லியன்...

நிலவும் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை இந்தத் திட்டத்திற்காக தலா 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளன.

நெருக்கடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சமுர்த்தி திட்டத்தின் கீழ் உதவி பெறும் குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

சமுர்த்தி பெறுவோருக்கு வழங்கப்படும் கொடுப்பனவும் ரூ.7,500 ஆக அதிகரிக்கப்படும் என்றும், நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு கிடைப்பதை அரசாங்கம் உறுதி செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, விவசாயிகளுக்கு உரம் வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர், கடந்த சில வாரங்களாக அரசாங்கம் உரத்தைக் கொள்வனவு செய்து வருகிறது என்றார்.

வெளிநாடுகளால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் விளைவாக எரிபொருள் இறக்குமதி தொடர்பான பிரச்சினைகள் எழுந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவிலிருந்து பெறப்பட்ட 65,000 மெட்ரிக் தொன் யூரியா உரம் உடனடியாக விநியோகிக்கப்படும்.

பெரும் போகத்தை இலக்காகக் கொண்டு உரங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும், அது நெல், சோளம் மற்றும் தேயிலை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

### முழு நாடும்...

தபால் திணைக்களம், பதிவாளர் நாயக திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் வாரத்தில் இரண்டு, மூன்று நாட்கள் மாத்திரமே இயங்குகின்றன. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அந்த நாட்களிலும் சேவைகளை முன்னெடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

**ரயில் சேவைகள் இடைநிறுத்தம்**

ரயில் சேவை திணைக்களத்தின் பொறியியலாளர்கள் உள்ளிட்ட ஊழியர்களுக்கு எரிபொருள் கிடைக்காமை காரணமாக நேற்றும் நேற்றுமுன்தினமும் 26 ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டதாக ரயில்வே பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்தார். இதன் காரணமாக தொழில் நிமித்தமும் அன்றாட கடமைகளுக்காகவும் ரயில் நிலையங்களுக்கு வந்த பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

**மரக்கறி விநியோகம் பாதிப்பு**

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதிலும் 90வீதமான மரக்கறி விநியோகப் பணிகள் தடைபட்டுள்ளன. தம்புள்ளை, நுகேகொடை, கட்டுகஸ்தோட்டை பொருளாதார மத்திய நிலையங்களில் மொத்த விற்பனை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு 90வீதமான மரக்கறி மாத்திரமே சந்தைக்கு கொண்டுவரப்பட்டதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தில் நாளாந்தம் ஆயிரம் முதல் ஆயிரத்து 500 வரையான லொறிகள் மரக்கறிகளைப் பெற்றுக்கொள்ள வருகை தருகின்ற போதும் நேற்றும் நேற்றுமுன்தினமும் சுமார் 200 வரையான லொறிகளே வருகைதந்ததாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

**சிறிய நடுத்தர நிறுவனங்கள் மூடல்**

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மூலப்பொருளை பெற்றுக்கொள்ள முடியாமை காரணமாக ஏழு இலட்சம் சிறிய, நடுத்தர நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிறிய, நடுத்தர முயற்சியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக சுமார் 20 இலட்சம் வரையானோர் தொழில்வாய்ப்பை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் நிருக்ஷன குமார தெரிவித்தார்.

**கடற்றொழில், தேயிலை, இறப்பர் துறை மந்தநிலையில்**

அத்தியாவசிய சேவைளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் வழங்கப்படுவதால் கடற்றொழிலாளர்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். நீண்டநாள் படகுகளில் தமது தொழிலை செய்ய முடியாமல் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர். இதனால் மீன்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன. குறிப்பாக மத்திய மலைநாடு உள்ளிட்ட கடல்சாராத பகுதிகளில் மிக அதிகமான விலைக்கு மீன்கள் விற்கப்படுகின்றன.

இதேவேளை, மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் தேயிலை, இறப்பர் தொழிற்றுறை மந்தகதியில் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளுக்கு தேயிலை, இறப்பரை கொண்டு செல்லுதல் மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து தலைநகர் கொழும்புக்கு விநியோகம் செய்தல் ஆகிய செயற்பாடுகள் குறைவடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### எரிபொருளுக்காக கோட்டா...

கட்டார் அறக்கட்டளை (Qatar Charity) நிறுவனத்திற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு இலங்கை தீர்மானித்துள்ளதாக உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கட்டாருக்கு சென்றுள்ள மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று தெரிவித்தார்.

"கட்டார் தொண்டு நிறுவன அதிகாரிகளை நேற்று சந்தித்தேன். 2019ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட நிதி தடையை நீக்குவதற்கான தீர்மானத்தை சட்டமா அதிபருக்கு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் அறக்கட்டளையின் பணிகள் குறித்து கலந்துரையாடப்பட்டது" என இலங்கை எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கட்டாரில் இருந்து ட்விட் செய்துள்ளார்.

கட்டார் அறக்கட்டளை நிறுவனம் கட்டார் அரசாங்கத்தின் முக்கிய தொண்டு நிறுவனமாகும். இது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் 'கட்டார் அறக்கட்டளை' ஒரு பயங்கரவாத நிறுவனம் என்று இலங்கை பாதுகாப்புத்துறை தெரிவித்தது.

கைது செய்யப்பட்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான வழக்கின்போது, 'கட்டார் அறக்கட்டளை' ஒரு பயங்கரவாத நிதி அமைப்பு என்றும், பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பது தொடர்பான குற்றங்கள் தங்களால் விசாரிக்கப்படுவதாகவும் சி.ஐ.டி. நீதிமன்றத்தில் தெரிவித்தது.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் வழக்கறிஞர்கள், கட்டார் அறக்கட்டளையை பயங்கரவாத அமைப்பாக பெயரிடுவது ஹிஸ்புல்லாவை 2019 ஈஸ்டர் தாக்குதல்களுடன் தொடர்புபடுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாகும் என்று கூறியுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 2019ஆம் ஆண்டு கொழும்பில் கட்டார் அறக்கட்டளை நிறுவன அலுவலக திறப்பு விழாவில் கலந்து கொண்ட பின்னர் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவளித்ததாக பொது பலசேனா குற்றஞ்சாட்டியது.

தற்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கி திணறும் இலங்கை, கட்டார் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிடமிருந்து எரிபொருள் கடன் கோரும் பேச்சை ஆரம்பித்துள்ளனர். இந்த நிலைமையில் கோட்டா அரசு, தனது முடிவுகளையே மாற்ற வேண்டிய நிலைமைக்கு உள்ளாகியுள்ளது.

# அடுத்த வாரம் மூன்று நாட்களுக்கு நாடாளுமன்றத்தை கூட்ட தீர்மானம்





நாடாளுமன்றம் அடுத்த வாரம் 04, 05 மற்றும் 06ஆம் திகதிகளில் கூடவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (30) நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

பல்வேறு காரணங்களுக்காக நாடா ளுமன்றத்தில் கேட்கப்படாத 50 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக எதிர்வரும் 4ஆம் திகதி மு.ப 10 மணி முதல் பி.ப 3.30 மணி வரையான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜூலை 05ஆம் திகதி மு.ப 10. 00 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, 1979ஆம் 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட 2270/59ஆம் இலக்க மற்றும் 2280/32 இலக்க வர்த்தமானி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான இறக்குமதித் தீர்வை வரி தொடர்பான தீர்மானம், 2020ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழான கட்டளை என்பவற்றை விவாதத்தின் பின்னர் நிறைவேற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன், 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் சட்டத்தின் கீழான 06 கட்டளைகள், 1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ்) விதிக்கப்பட்ட 2282/21ஆம் இலக்க மற்றும் 2282/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பன அன்றையதினம் விவாதத்தின் பின்னர் சபையில் அனுமதிக்கப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்கும், பி.ப 4.50 மணி முதல் 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதத்துக்கும் நேரத்தை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜூலை 6ஆம் திகதி மு.ப 10 மணி முதல் மு.ப 10.30 மணி வரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக எதிர்க்கட்சி கொண்டுவரும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் பி.ப 4.30 மணி வரை நடைபெறவிருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அத்துடன், தற்போது நிலவும் சிரமங்கள் காரணமாக நாடாளுமன்றம் கூடாத நாட்களில் குழுக் கூட்டங்களை ஒன்லைன் மூலம் நடத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், இதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# சீனத் தூதுவர் - தம்மிக்க பெரேரா ஆகியோருக்கிடையில் சந்திப்பு



சீனத் தூதுவர் கியூ செங்ஹொங் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேராவை நேற்று முன்தினம் (29) சந்தித்தார்.

மேலும் சீன - இலங்கை பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பை மேம்படுத்துதல், இலங்கையில் சீனா முதலீடு செய்த திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் பரஸ்பர நலன்கள் பற்றிய பிற தலைப்புகள் பற்றிய கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

இந்த சந்திப்பில் சீனத் தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டுள்ளனர்.

# தொல்பொருள் பெறுமதிமிக்க புத்தர் சிலையுடன் ஒருவர் கைது

**(அநுராதபுரம் செய்தியாளர்)**



தொல்பொருள் பெறுமதிமிக்க புத்தர் சிலையொன்றினை நாலு கோடி ரூபாவிற்கு விற்பனை செய்வதற்கு முயற்சித்த சந்தேக நபர் ஒருவரை கலன்பிந்துனுவெவ மொரகொட பகுதியில் வைத்து விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட பொலிஸ் அதிரடிப்படையின் வவுனியா முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலொன்றுக் கமைய நேற்று முன்தினம் (29) மொரகொட பொலிஸ் பிரிவின் மெகொடவெவ பகுதி வீடொன்றில் நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் பெறுமதிமிக்க புத்தர் சிலையொன்றையும் போர 12 துப்பாக்கிக்கு பயன்படுத்தும் தோட்டாக் கள் சிலவற்றையும் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் வவுனியா முகாம் அதிகாரி கள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 38 வயதுடைய உண கொள்ளாவ, மெகொடவெவ, மொரகொட பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, புத்தர் சிலையினை கொள்வனவு செய்வதற்காக வேண்டி விசேட பொலிஸ் அதிரடிப்படையினரே மாறுவேடம் பூண்டு சென்றுள்ளனர் என்பது மேலும் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சந்தேகநபரையும் கைப்பற்றிய புத்தர் சிலையையும் மொரகொட பொலிஸ் நிலையத்தில் அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொறகொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் மஹிந்த குணரத்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் கஹட்டகஸ்திகிலிய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# தினக்குரல் செய்தி ஆசிரியரின் தந்தை காலமானார்



தினக்குரல் செய்தி ஆசிரியர் சிவகணேசனின் அன்புத் தந்தையான கந்தையா தம்பிராசா(Rtd Investigation Inspecor-Postal Department) நேற்று வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் அமரர் விசாலாட்சியின் அன்புக் கணவரும் சிவகுமாரன் (தமிழருவி சிவகுமாரன்), சிவபாலன் (ஆசிரியர்), சிவகணேசன் (செய்தி ஆசிரியர்-தினக்குரல்), சிவராணி (விரிவுரையாளர் -யாழ். பல்கலைக்கழகம்), சிவசோதி (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இல- 78, இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

# சுதந்திர ஊடக இயக்கத்துக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு

சுதந்திர ஊடக இயக்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் 2022/2023ஆம் ஆண்டிற்கான உத்தியோகத்தர்களும், நிறைவேற்றுக்குழு உறுப்பினர் களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

உத்தியோகத்தர்களாக, லசந்த டி சில்வா (அழைப்பாளர்), ஹனா இப்ராஹீம் (செயலாளர்), ஆனந்த ஜயசேகர (பொருளாளர்), பிரியதர்ஷினி சிவராஜா (உபசெயலாளர்) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாக, சீதா ரஞ்சனி, இசுனில் ஜயசேகர, தாஹா முஸம்மில், உதய களுபதிறன, சமன் சீலியனகே, ஜாவிட் முனவ்வர், நிரஞ்சனி ரோலண்ட், திலீஷா அபேசுந்தர, சம்பத் சமரகோன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எஸ்.ஜீ. புஞ்சிஹேவா, லக்ஷ்மன் குணசேகர ஆகியோர் அறங்காவலர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



**இலங்கைக்கான ரஷ்யக் கூட்டமைப்பின் தூதுவர் யூரி மெட்டரி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து நேற்றுமுன்தினம் சந்தித்தார். இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட பல நடவடிக்கைகள் குறித்து தூதுவர் மெட்டரியிடம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் விளக்கினார்.**

# சவால்கள் நிறைந்த காலங்களில் தமது ஊழியர்களை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கும் 99X





இந்த சவால்கள் நிறைந்த காலங்களில் தனது ஊழியர்களுக்கு பல சலுகைகளை வழங்குவதற்கான அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தி, இலங்கையின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனமான 99x, தனது ஊழியர்களின் நிதி மற்றும் உளவியல் நல்வாழ்வைப் பாதுகாக்கும் அதே வேளையில் வர்த்தக செயற்பாட்டை உறுதிப்படுத்த முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த தீர்க்கமான படிகள் 99x ஊழியர்களுக்கு கடினமான காலங்களில் தங்கள் உலகளாவிய வாடிக்கையாளர்களுக்கு மிக உயர்ந்த சேவையை வழங்க உதவியாக உள்ளது.

நாட்டில் சவாலான சூழல் இருந்தபோதிலும், 99xஇல் உள்ள அணிகள் அனைத்தையும் பலப்படுத்துவதுடன், இதன் மூலம் தங்கள் வாடிக்கையாளர்களின் டிஜிட்டல் அபிலாஷைகளை மேலும் வலுப்படுத்துகிறது. BUS, Driv Kapital, SuperOffice, Parkly, Lettbutikk மற்றும் Culture Intelligence உள்ளிட்ட முன்னணி நார்டிக் தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னணி உறுப்பினர்கள், பல்வேறு சவால்களுக்கு மத்தியில் உயர்தர தயாரிப்புகளை வழங்க 99x ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் அதனை எதிர்கொள்ளும் ஆற்றல்களை பாராட்டுகின்றனர்.

“BUS 10 ஆண்டுகளுக்கும் மேலாக 99x உடன் பணியாற்றி வருகிறது. மேலும் வலுவான விநியோகம் தொடர்பில் இந்த அணியை நாங்கள் எப்போதும் நம்பலாம். பல சவால்களுக்கு மத்தியிலும் அவர்களின் முயற்சிகளில் எந்த மாற்றமும் இல்லை. அவர்கள் நெகிழ்ச்சி, நம்பிக்கை மற்றும் எங்கள் தயாரிப்புகளில் கவனம் செலுத்த எப்போதும் ஆர்வமாக உள்ளனர். அவர்கள் கடினமாக உழைத்து, எங்கள் தயாரிப்புகளை சந்தைக்கு வழங்க வேண்டியிருக்கும் போதெல்லாம் தரமான விநியோகத்தில் கவனம் செலுத்தினார்கள். எமது 99x சகாக்கள் இலக்குகளை அடைவதற்கும், தங்கள் சேவைகளை நேர்மறையாகவும் வலுவாகவும் வழங்குவதில் மிகவும் உறுதியாக உள்ளனர் என BUS ASஇன் தயாரிப்பு மேம்பாட்டுத் தலைவர் லோரன் ஹோய்விக் கூறினார்.

Driv Kapitaன் இணை நிறுவுனரும் 99x இன் முதலீட்டாளருமான Fredrik Bysveen கூறுகையில், “99x உடன் பணிபுரிவது தனிப்பட்ட முறையில் மற்றும் தொழில் ரீதியாக எப்போதும் ஒரு அற்புதமான அனுபவமாக உள்ளது. இலங்கை முன்னெப்போதுமில்லாத சவால்களை எதிர்கொள்ளும் காலங்கள் உள்ள போதிலும் வணிக நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் திட்டங்களில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. 99x குழுவின் விடா முயற்சி மற்றும் எதையும் தவறவிடாமல் பார்த்துக்கொள்வதில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் அர்ப்பணிப்பு குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

99x இன் அர்ப்பணிப்பு மற்றும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மிக உயர்ந்த அளவிலான சேவையை வழங்குவதற்கான திறன் ஆகியவை 99x இல் எங்கள் முதலீட்டில் ஒரு முக்கிய காரணியாக இருந்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை” என தெரிவித்தார்.

ஊழியர்களின் இத்தகைய ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் உறுதி செய்வதற்காக,99x, இனால் ஆரம்பிக்கப்பட்ட முக்கிய முயற்சிகளில் ஒன்றாக வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இலங்கையில் உள்ள அதன் அனைத்து ஊழியர்களும் சம்பளம் மற்றும் கொடுப்பனவு நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை சிறப்பாக பிரதிபலிக்கும் வகையில் ஊதிய திருத்தங்கள் மூலம் வலுவான சம்பளத்தைப் பெறுவார்கள். 99x பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிசெய்வது நிறுவனம் ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்ள உதவும் என்று நம்புகிறது. மேலும் அவர்களின் உற்பத்தித்திறன் மற்றும் திருப்தியை மேம்படுத்துகிறது.

மேலும், 99x தனது ஊழியர்களின் ஆரோக்கியத்தை வலுப்படுத்த ஒன்லைன் வைத்திய ஆலோசனையை பெற்றுக் கொள்வதற்கு oDoc மற்றும் Global உள்ளிட்ட ஒன்லைன் மருத்துவ ஆலோசனை சேவைகளுடன் கூட்டு சேர்ந்துள்ளது. இந்தத் திட்டங்கள் Xiansக்கு அவர்களின் ஏமாற்றங்களை வெளிப்படுத்தவும், வழிகாட்டிகளுடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றன, இதன் மூலம் பணியாளர்களின் மன வலிமையைக் கட்டமைக்கவும், உற்பத்தித்திறனை மேம் படுத்தவும், தனிநபர்கள் மற்றும் பணியிடத்திற் கான உந்துதலைப் பராமரிக்கவும் உதவுகிறது.

“இலங்கையில் ஒரு முன்னணி தொழில்நுட்ப நிறுவனமாக, பல வருடங்களாக எங்களின் வளர்ச்சி எப்பொழுதும் எமது ஊழியர் சமூகத்தின் வளர்ச்சிக்கு இணையாக உள்ளது. அவர்களுடைய அர்ப்பணிப்பால் நாங்கள் இங்கு இருக்கிறோம். இத்தகைய சவாலான காலகட்டத்தில் எங்கள் ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் எங்கள் கவனம் உள்ளது. ஒரு பொறுப்பான அமைப்பாக, அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவை எதிர்கொள்ள ஊதியம் மற்றும் கொடுப்பனவு நிலைகளை மேம்படுத்தவும் திருத்தவும் நாங்கள் பணியாற்றியுள்ளோம். நமது ஊழியர்கள் வலுவடைந்து அவரது உடல் மற்றும் மன நலனை மேம்படுத்த உழைக்கிறார்கள்” என 99x இணை நிறுவனர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி மனோசேகரம் தெரிவித்தார்.

தொழில்நுட்ப மாற்றம் மற்றும் உலகமயமாக்கலின் இரட்டை சக்திகள் உலகப் பொருளாதாரத்தை பலதரப்பட்ட மற்றும் சரியான நேரத்தில் மறுவடிவமைத்து வருகின்றன. மேலும் அவற்றின் விளைவுகள் தொழிலாளர் சந்தைகளால் நன்கு உணரப்படுகின்றன.

99x மேம்பட்ட பொருளாதாரங்களில் உருவாகி வரும் பணியாளர்களின் தேவைகளை ஆராய்வதற்கும் அவற்றைச் சந்திப்பதில் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்துவதற்கும் எதிர்பார்த்துள்ளது. 99x, அவர்களின் பணியாளர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்த பல திறன் மேம்பாட்டு திட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த திட்டங்கள் தங்கள் நோக்கத்தில் மட்டுப்படுத்தப்படாத தலைவர்களை உருவாக்குவதற்கும் அனைத்து தரப்பு மக்களாலும் அங்கீகரிக்கப்பட்ட பணி கலாசாரத்தை தழுவும் வகையில் ஆரம்பிக்கப்படுகின்றன. இதன் மூலம் அவர்கள் உலகளவில் பாராட்டப்பட்ட நிறுவனத்தில் சமீபத்திய தொழில்நுட்பத்துடன் பணியாற்றுவதற்கான அனைத்து வாய்ப்பையும் வழங்குவதுடன், இத்தகைய திட்டங்கள் பணியாளர்களை வேலையில் கடினமாக உழைக்கச் செய்து, உயர்தரமான பணிக் கலாசாரத்தை உருவாக்குகின்றன.

இதன் விளைவாக, பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கிய நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் வணிக முடிவுகள், புத்தாக்கங்கள் மற்றும் முடிவுகளை எடுப்பதில் கணிசமான இலாபங்களை அடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாடு முழுவதிலும் வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. தெருக்களின் இரு மருங்கிலும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் எரிபொருளை எதிர்நோக்கியவண்ணம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

ஆங்காங்கே எரிபொருள் கிடைக்கப்பெறுவதாக பேசப்படும் வதந்திகள், அரச தரப்பினராலும், எதிர்க்கட்சியினராலும் முன்னுக்குப் பின் முரணாக சொல்லப்படும் தகவல்கள் ஆகியவற்றைக் கேட்டு, உண்மையில் எப்போது எரிபொருளை பெற்றுக்கொண்டு வீட்டுக்குச் செல்லலாம் என்பதை அறியாமல் மக்கள் காத்திருக்கிறார்கள்.

மறுபுறம் எரிவாயுவுக்கான வரிசை நாளுக்கு நாள் நீண்டுகொண்டே செல்கிறது. மக்கள் விரக்தியிலும், ஒருவகையான மன உளைச்சலிலும் இருப்பதை நேரடியாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்நிலையில் இம்மாதம் 22 ஆம் திகதியே பெற்றோல் கப்பல் நாட்டை வந்தடையும் நிலைமை காணப்படுவதாக பிரதமர் அலுவலகத்தின் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

"ஜூலை 10 ஆம் திகதிக்குள் எரிபொருள் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது. பெற்றோலை நாட்டுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற போதிலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் முன்பதிவு செய்யப்பட்ட பெற்றோல் கப்பல் இம்மாதம் 22 ஆம் திகதியே நாட்டை வந்தடையும் நிலை காணப்படுகிறது. அதற்கு முன்னர் பெற்றோலை பெற்றுக்கொள்ள முடியுமா என்பது தொடர்பில் ஆராய்கிறோம்" என அவர் தெரிவித்துள்ளார்.

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, ட்விட்டர் பதிவின் ஊடாகவே எரிபொருள் தொடர்பான நிலைமைகளை தெரிவித்துவந்தார். மக்கள் மத்தியில் உள்ள பல்வேறு கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் அவை பதிலளிக்க போதுமானவையாக அமையவில்லை.

எரிவாயு பிரச்சினைக்கு இந்த மாதம் தீர்வு காணப்படும் என்றும், 30 ஆயிரத்து 300 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயு இறக்குமதி செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்,

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜுலை 01ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# மக்களின் சீற்றம் புயலாக மாறும்

முதற்கட்ட கப்பல் எதிர்வரும் 06 ஆம் திகதி நாட்டை வந்தடையும் எனவும் சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், அரச தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தி சாகல ரத்நாயக்க வெளியிட்டுள்ள தகவலானது மக்களின் கவலையையையும், ஆத்திரத்தையும் மேலும் அதிகரித்துள்ளது. எரிபொருள் தீர்ந்திருக்கிறது, அல்லது நிலைமை மோசமடைகிறது என அறிந்தும் அதற்கு நடவடிக்கை எடுக்காமை குறித்து அரசாங்கம் வெட்கப்பட வேண்டும்.

எரிபொருளை பெற்றுக்கொடுப்பதற்காக டோக்கன்கள் வழங்கப்படுகின்றன. டோக்கன்களுக்காகவும், பின்னர் எரிபொருளுக்காகவும் இருமுறை வரிசைகளில் மக்கள் காத்திருக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. அதிலும் பல முறைகேடுகள் இடம்பெறுவதாக அறியமுடிகின்றது.

ஏற்கனவே எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக அனைத்து பொருட்களின் விலைகளும் மேலும் அதிகரித்துள்ளன. பஸ் கட்டணங்களும் இன்றுமுதல் அதிகரிக்கப்படுகின்றன.

எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்களுக்கு அது எப்போது கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லை. பெற்றோல், டீசலுக்காக வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என கடந்த காலங்களில் அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்திருந்தாலும் கூட விநியோகம் இடம்பெற்றிருந்தது. அவ்வாறு எரிபொருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் மக்கள் தொடர்ந்தும் இரவு, பகலாக காத்திருக்கிறார்கள்.

வரிசைகளில் காத்திருப்போர் மரணிக்கும் சம்பவங்கள் கவலைக்குரியன. அவ்வாறு காத்திருந்தோரில் நேற்றுவரை 20 பேர் மரணித்துள்ளனர். இப்போது மக்கள் விரக்தியின் உச்சநிலையில் இருக்கிறார்கள்.

வரிசையில் நின்றவண்ணம், தமது தொழில், குடும்பம், எதிர்காலம் என அவர்களது எண்ணவோட்டங்கள் பலவாக அமைந்திருக்கின்றன. அவை, உச்சம் கொள்ளும் பட்சத்தில் அந்த சீற்றத்தை இந்த நாடு தாங்காது.

ஏனென்றால், இந்தப் பிரச்சினைக்கு ஒருசாரார் என்றில்லாமல் அனைத்துத் தரப்பினரும் முகங்கொடுத்துள்ளார்கள். அரசாங்கத்தின் திட்டமிடல்கள், முகாமைத்துவம் முறையாக அமையாததன் விளைவை முழு நாடும் எதிர்கொண்டுள்ளது. வரிசைகளில் காத்திருக்கும் மக்களின் கோபத்தை தூண்டாமல் எரிபொருள், எரிவாயு ஆகியவற்றை உடனடியாக நாட்டுக்கு கொண்டு வருவதற்கான மாற்றுவழிகள் குறித்து அரசு சிந்திக்க வேண்டும்.

# எரிபொருள் நெருக்கடியால் விரிசலடையும் முரண்பாடுகள்!

தற்போதைய காலகட்டம் மிகவும் முக்கியத்துவமிக்கதாக பொதுமக்களிடத்தில் மாறிவிட்ட தொன்றாகக் காணப்படுகின்றது. இது இலங்கை வரலாற்றில் மிகவும் மோசமான காலப்பகுதி என சமூக ஆர்வலர்கள் விமர்சனம் செய்கின்றனர். குறிப்பாக படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்விலும் இது செல்வாக்குச் செலுத்துகின்றது.

உண்மையில் நடப்பது என்ன என்பது பற்றி இன்னமும் யாருக்குமே தெளிவான முடிவெடுக்க முடியாத நிலையில், ஒரு பக்கம் அரசாங்கமும், மறுபக்கம் அரசியலும் திணறடித்துக் கொண்டு செல்கின்றன.

இவ்வாறிருக்கும் நிலையில், உணவுத் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு என நிலைமைகள் மோசமடைந்து செல்வதால், மக்களின் அன்றாடத் தேவைகளும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாகக் காணப்படுகின்றன. மேலும், எரிபொருள் விலையேற்றத்தினால், நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சமும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இதில் முக்கியமாக நாட்டில் எங்கு பார்த்தாலும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் மிக நீண்ட வரிசையில் காத்து நிற்பது வேதனை தருகின்ற ஒன்றாக மாற்றமடைந்துள்ளது. இது பொதுமக்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பிழையான அணுகுமுறையாகும். இதனாலேயே பல முரண்பாடுகள் விரிசலடைந்து பல பிரச்சினைகளும் உருவாகுவதற்கு பெரும் காரணியாக அமைந்துள்ளது.

குறிப்பாக பிழையான தகவல் பரிமாற்றங்களை கேள்வியுறும் பொதுமக்கள், அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை அண்டிய பிரதேசத்தில், நாட்கணக்காக, இரவு பகல் பாராது, உணவு, உறக்கமின்றி காத்துக்கொண்டு நிற்கின்றனர். இந்த விடயத்தில் இவர்களைக் கட்டுப்படுத்த அல்லது இவர்களுக்கான தெளிவான தகவல்களைப் பரிமாற்றம் செய்ய சில பொலிஸ் நிலையங்களும், பிரதேச செயலாளர்களும், இராணுவத்தினரும் தவறிவிட்டனர் என்பதே உண்மை.

ஓர் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எரிபொருட்களான டீசலோ, பெற்றோலோ அல்லது மண்ணெண்ணெயோ வருவதற்கு முன்பு பொதுமக்கள் தாங்களாகவே வரிசையில் காத்திருக்கும் நிலையை இந்த மூன்று தரப்பினரும் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டியது காலத்தின் தேவையாக மாறிவிட்டது.

ஏனென்றால், இதன்மூலம் பல்வேறு விபத்துகள் ஏற்பட்டதனை அண்மைக்கால செய்திகளின் மூலம் நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு வீதிகளின் இரு மருங்கிலும் இவர்கள் ஒன்று கூடி நிற்பதனால் பல்வேறு போக்குவரத்து பிரச்சினைகளும் நாளுக்கு நாள் ஏற்படத் தொடங்கியிருக்கின்றன. எனவே, எரிபொருட்கள் வருவதற்கு முன்பு, எரிபொருள் நிலையத்தை அண்டிய பிரதேசங்களில் பொதுமக்கள் நாட்கணக்காக காத்துக் கொண்டிருக்கும் நிலையை இல்லாமல் செய்ய வேண்டியது பொலிஸாரின் கடமையாகும்.





இதேவேளை எரிபொருட்களை பெற்றுக் கொள்வதற்கு நீண்ட வரிசையில் காத்திருக்கும் சிலர், எரிபொருள் நிரப்பு நிலையத்தினால் விநியோகிக்கப்படும் எரிபொருட்கள் அனைத்தும் தீர்ந்துள்ள நிலையில், வரிசையில் காத்திருந்து கடைசிவரை தங்களுக்கு எரிபொருள் கிடைக்காமல் போவதால் நாட்கணக்கில் காத்துக்கொண்டிருந்தவர்கள் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளருடன் முரண்படும் நிலையும் உருவாகிறது. அத்துடன் சில சந்தர்ப்பங்களில் நுகர்வோர் அதிகாரசபையுடன் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் எரிபொருளினைப் பதுக்கி வைத்துள்ளனரா என சந்தேகக் கண்ணுடன் பார்ப்பதனால், மீண்டும் மீண்டும் பொதுமக்களுக்கும், எரிபொருள் நிலைய உரிமையாளர்களுக்கும் பாரிய முரண்பாடுகள் உருவாகின்றன. சில சந்தர்ப்பங்களில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எரிபொருட்களை கொள்வனவு செய்வதில் தயக்கம் காட்டியும் வருகின்றனர். இது இவ்வாறிருக்க சில சந்தர்ப்பங்களில் எரிபொருளினைப் பெற்றுக்கொள்ள அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களும் இதனால் பாதிக்கப்படுபவர்களாக மாறியுள்ளனர்.

இதேவேளை, எரிபொருட்களை பெற்றுக்கொள்வதற்கு கூப்பன் முறையிலான டோக்கன் வசதிகளை பொலிஸ் நிலையங்களோ அல்லது பிரதேச செயலகங்களோ வழங்குவதன் மூலம் இப்பிரச்சினைக்கான தீர்வினை ஓரளவு பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். ஏனென்றால், ஒரு தடவை எரிபொருளினை நிரப்பியவர்கள் அடுத்த நேரம் மீண்டும் வரிசையில் காத்திருந்து மேலதிகமாக எரிபொருளினைப் பெறுபவர்களாக காணப்படுகின்றனர்.

இவ்வாறான நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க, கூப்பன் முறையிலான அட்டை ஒன்றினை இவர்கள் அறிமுகப்படுத்தி, எரிபொருள் நிரப்பும்போது எரிபொருள் கூப்பனை கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என்ற கண்டிப்பான உத்தரவினை ஒவ்வொரு பிரதேச செயலகமும், பொலிஸாரும், இராணுவத்தினரும் நடைமுறைப்படுத்த வேண்டும். அல்லது இந்த கூப்பனைக் கொண்டு வராதவர்களுக்கு எரிபொருள் வழங்காமல் இருக்க அந்த எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்போதுதான் இவ்வாறான சிக்கல் நிலைமைகளுக்கு ஓரளவேனும் முற்றுப்புள்ளியினை வைக்க முடியும். இல்லாவிட்டால் மீண்டும் மீண்டும் வரிசையில் நின்று மற்றவர்களுக்கு கிடைக்க வேண்டிய எரிபொருட்களை ஒரு குறிப்பிட்ட சிலர் காவுகொள்ளும் கலாசாரம் வளர்ந்து கொண்டே செல்லும்.

எனவே, இவ்வாறு கூப்பன் முறையிலான டோக்கன் வசதிகளை மக்களுக்கு வழங்கும் போது, நாட்கணக்காக வீதியோரங்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏங்கிக்கிடக்கும் பொதுமக்களுக்கு ஆறுதலாக அமைவதுடன், எரிபொருள் நிலையத்திற்கு எரிபொருட்கள் வந்ததன் பிறகே பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான எரிபொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தினை இம்மூன்று தரப்பும் செய்யும்போது, மக்களிடத்தில் எழும் வீணான முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ள இது பெரிதும் துணைபோகும் செயற்பாடாக மாறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எனவே, குறித்த விடயத்தில் பிரதேச செயலகங்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் இராணுவம் என்பன இணைந்து நீதியான முறையில் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான எரிபொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய வழிவகைகளை செய்து கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என்பதுடன், பொதுமக்கள் வீதியோரங்களில் நின்று கொண்டு வீணாக நேரத்தை கழிக்காமல், எரிபொருள் நிலையத்திற்கு எரிபொருள் கிடைக்கப்பெற்றதன் பின்னரே அவர்கள் தமக்குத் தேவையான எரிபொருட்களை பெற்றுக்கொள்வதற்கு முறையான திட்டம் ஒன்றினை வகுத்துக் கொடுக்க வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும்.

**(சுலைமான் றாபி - நிந்தவூர்)**

# குப்பைகளினால் நிரம்பி வழியும் களுத்துறை தெற்கு



நாட்டின் பொருளாதார சிக்கலினால் சிக்கித் தவிக்கும் மக்கள் நாளுக்கு நாள் தங்களது உயிரை கையில் பிடித்துக் கொண்டு கடந்து செல்வதை காணமுடிகின்றது. கடந்த இரண்டு வருடங்களாக இந்த தேசத்தை ஆட்டிப் படைத்த கொடிய கொரோனா வைரஸினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அப்போது விழிப்புணர்வு அடைந்த மக்கள் தொடர்ந்தும் அவ்வாறு இருக்க மறந்து விட்டனர்.

கொரோனாவால் மாத்திரமா மனித உயிரை பறிக்க முடியும் என்றவாறு தற்போது நாடளாவிய கதியில் டெங்கு நோய் பரவியுள்ளது.

நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் பரவல் வேகமாக அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் மாத்திரம் 733 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள அதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்திலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் தொடர்ந்தும் தவறிழைத்து வருவதை காண கூடியதாக உள்ளது. "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நல்ல மனிதர்களுக்கு ஒரு சொல்" என்பது உண்மைதான்.

நாடளாவிய ரீதியில் டெங்கு அதிகளவில் பரவியிருக்கும் பட்சத்தில் களுத்துறை நகரில் குறிப்பாக முஸ்லிம்கள் செறிந்து வாழக்கூடிய இடங்களில் மக்கள் அதிகளவானோர் டெங்கு நோயாளர்களாக இணங்காணப்பட்டுள்ளனர்.

களுத்துறை தெற்கு பிரதேசத்தினை சற்று உற்று நோக்கினால் குப்பைகள் நிரம்பி வழிந்துள்ளதை காணமுடிந்தது. எனினும், அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டு, கடந்து செல்கின்றவர்கள் அதிகம்.

**இதற்கு யார் பொறுப்பு?**

தங்களுடைய வீட்டையும், முற்றத்தையும் சுத்தம் செய்து அந்த கழிவுகளையும், சமையலறை கழிவுகளையும் பாதைகளில் வைத்துவிட்டு சுயநலமாக செயற்படும் பொதுமக்களா? ஏனோ கடமைக்காக கிழமைக்கு ஒரு நாளில் குப்பைகளை எடுத்துச் செல்லும் வகையில் முறையான கழிவகற்றல் திட்டங்களை அமைக்காத அதிகாரிகளா?

நாளுக்கு நாள் நிரம்பி வழியும் குப்பைகளை கிழமைக்கு ஒருநாளில் எடுத்துச் செல்வது முறையான திட்டமாகாது.

இது அதிகாரிகளுக்கு தெரியவில்லையா? தெரிந்தும் தெரியாமல் இருக்கிறார்களா?

பொதுமக்கள் அதிகாரிகளை குறை கூறுவதும், அதிகாரிகள் பொதுமக்களை குறை கூறுவதுமாக இன்றைய நிலை மாறிவிட்டது.

பொதுமக்கள் ஏன் இந்த விடயத்தில் சுயநலமாக செயற்படுகிறார்கள் என்பது கேள்விக்குறியாக உள்ளது. இதனால் பலியாக போவது நாளை நீங்களாகவும் இருக்கலாம்.


"குப்பை ஒழிப்பு" திட்டத்தை பொதுமக்கள் உணர்ந்து மேற்கொள்ள வேண்டும். அதற்காக மக்கள் முன்வர வேண்டும்.

உரிய அதிகாரிகள் இதற்கான நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இந்த விடயத்தை களுத்துறை நகர சபை தலைவரிடம் கோரிக்கையாக விடுக்கின்றேன்.

**அவ்ரா அன்சார்**

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1569 – போலந்தும், லிதுவேனியாவும் இணைந்துகொள்ள சம்மதித்தன. இணைந்த நாடு போலந்து - லிதுவேனியா பொதுநலவாயம் என அழைக்கப்பட்டது.
- 1770 – லெக்செல்லின் வால்வெள்ளி பூமிக்கு மிகக்கிட்டவாக (0.0146 வா.அ தூரம்) வந்தது.
- 1819 – யோகான் திராலெஸ் என்பவர் சி/1819 என்1 என்ற வால்வெள்ளியை அவதானித்தார்.
- 1874 – முதலாவது வணிகரீதியிலான தட்டச்சுக்கருவி விற்பனைக்கு வந்தது.
- 1921 – சீனப் பொதுவுடமைக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 – அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1933 – வில்லி போஸ்ட் உலகை முதன்முதலில் தனியே சுற்றிவந்து சாதனை படைத்தார். 15,596 மைல்களை இவர் ஏழு நாட்கள், 18 மணிநேரம், 45 நிமிடங்களில் சுற்றி வந்தார்.
- 1947 – இந்தியாவுக்கு முழு விடுதலையை ஓகஸ்ட் 15 ஆம் நாளன்று வழங்க பிரித்தானிய நாடாளுமன்றம் முடிவெடுத்தது.
- 1948 – முகம்மது அலி ஜின்னா பாகிஸ்தானின் நடுவண் வங்கியான பாகிஸ்தானிய அரசு வங்கியை ஆரம்பித்தார்.
- 2002 – அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டது.
- 2004 – காசினி - ஹியூஜென்சுஸ் விண்கலம் சனிக்கோளின் சுற்று வட்டத்திற்குள் சென்றது.
- 2013 – நெப்டியூனின் எஸ்/2004 என் 1 நிலவு கண்டுபிடிக்கப்பட்டது.

# இடைக்கால சர்வகட்சி அரசாங்கத்தை உடனடியாக ஜனாதிபதி அமைக்கவேண்டும்

## வழமையான அரசியல் அணுகுமுறை உகந்ததல்ல என்கிறது தேசிய சமாதானப் பேரவை

நாடாளுமன்றத்திலுள்ள சகல கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால கருத்தொருமிப்பு அரசாங்கம் ஒன்றை நிறுவுவதாக அளித்த உறுதிமொழியை உடனடியாக நிறைவேற்றவேண்டும் - என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வலியுறுத்திக் கேட்டிருக்கிறது.

வழமையான அரசியல் அணுகுமுறைகள் உகந்ததல்ல என்று கூறியிருக்கும் கலாநிதி ஜெகான் பெரேராவை நிறைவேற்றுப் பணிப்பாளராகக்கொண்ட சமாதானப் பேரவை செவ்வாயன்று விடுத்திருக்கும் அறிக்கையின் விபரம் வருமாறு,

பொருளாதார நெருக்கடி தொடர்ந்து மோசமாகிக்கொண்டே போகிறது. வரிசைகள் நீண்டுகொண்டு போகின்றன. விலைவாசி தொடர்ந்து உயர்ந்துகொண்டிருக்கிறது. அத்தியாவசிய பாவனைப் பொருட்கள் கிடைப்பதாக இல்லை. குறிப்பாக, பொருளாதார நெருக்கடியைக் கையாண்டு பொருளாதாரத்தை உறுதிநிலைப்படுத்தவும் புதிய தேர்தல்களை நடத்தவும் சிறிய அமைச்சரவையைக்கொண்ட இடைக்கால சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் என்பதே அறகலய போராட்ட இயக்கத்தின் எழுச்சியை அடுத்து பரவலான எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆனால், அவ்வாறு எதுவும் நிகழவில்லை. ஆட்சிமுறை என்பது அரசின் இன்றியமையாத அம்சமாகும். வெறுமனே அதிகாரத்தைப் பயன்படுத்துவது மாத்திரமல்ல, ஒவ்வொருவரது உரிமைகளையும் சகலரினது நல்வாழ்வையும் பேணிப்பாதுகாப்பதும் நல்லாட்சி முறையாகும்.

துரதிர்ஷ்டவசமாக தற்போதைய நிலைவரங்களை நோக்கும்போது அரசாங்கம் அதிகாரத்தில் தன்னை வலுப்படுத்திக்கொண்டு நீண்டகாலத்துக்கு பதவியில் தொடர்வதில் நாட்டங்கொண்டு செயற்படுகிறது என்றே தோன்றுகிறது. பொருளாதார மற்றும் அரசியல் தீர்மானங்களை மேற்கொண்டபோது பாரதூரமான தவறுகளை இழைத்ததை ஒத்துக்கொண்டு மன்னிப்புக் கேட்டபோதிலும் கூட ஜனாதிபதி கோட்டாபய தனது பதவிக்காலத்தின் எஞ்சிய இரு வருடங்களுக்கும் பதவியில் தொடரப்போவதாக அறிவித்திருக்கிறார்.

அமைச்சர்களின் எண்ணிக்கை எதிர்பார்க்கப் பட்டதைவிடவும் கூடுதலானதாக இருக்கிறது. அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர்களுமாக சுமார் 40 பேர் இப்போது இருக்கிறார்கள். மேலும் 25 மாவட்ட அமைச்சர்களும் நியமிக்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது.

தனியார்துறையில் இந்த வகையான தவறான முகாமைத்துவம் இடம்பெற்றிருந்தால் அது உடனடி பதவி நீக்கத்துக்கே வழிவகுத்திருக்கும். எமது அரசாங்க சேவையில் அது இடைநிறுத்தத்துக்கு அல்லது இடமாற்றத்துக்கு வழிவகுத்திருக்கும். புதிய பிரதமரும் அமைச்சர்களும் நியமிக்கப்பட்டு 6 வாரங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட பொருளாதார மீட்சிக்கான எந்தவொரு திட்டமும் முன்வைக்கப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவும் அமெரிக்க திறைசேரி அதிகாரிகளும் இந்திய அதிகாரிகளும் கொழும்புக்கு விஜயங்களை மேற்கொண்டிருந்தார்கள். அவர்களின் நல்லெண்ணத்தை பயன்படுத்தி தேசிய நலன்களை பாதுகாக்கக்கூடிய பொருளாதார மீட்சி திட்டத்தை வகுக்கமுடியும்.

குறிப்பிட்ட ஒரு காலகட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால கருத்தொருமிப்பு அரசாங்கம் ஒன்றை நிறுவுவதாக அளித்த வாக்குறுதியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை அவரிடம் கோருகிறது. தற்போதைய நெருக்கடி நிலைமையில் நாடாளுமன்றம் எதிரெதிர்க் கருத்துகள் வெளிப்படுத்தப்படுகின்ற சமர்க்களமாக அல்லாமல் ஒத்துழைப்பை வெளிக்காட்டுகின்ற சபையாக செயற்படவேண்டும். ஓர் இடைக்கால ஏற்பாடாக 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்படவேண்டும். அதைத் தொடர்ந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைமை ஒழிக்கப்படவேண்டும். ஜனாதிபதியின் அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையே இன்றைய அனர்த்தத்துக்கு கணிசமானளவுக்கு பங்களிப்பைச் செய்திருக்கிறது. இன, மத பின்னணிகளுக்கு அப்பால் சகல சமூகங்களையும் ஒன்றிணைய வைத்திருக்கும் அறகலய போராட்டக் களங்களிலிருந்து வெளிக்கிளம்புகின்ற செய்தி இதுவேயாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற அறிக்கையிடலில் ஈடுபடும் ஊடகவியலாளர்களுக்கு விசேட செயலமர்வு







நாடாளுமன்ற நடவடிக்கைகளை அறிக்கையிடும் ஊடகவியலாளர்களுக்குப் நாடாளுமன்ற முறைமை தொடர்பில் விசேட ஒரு நாள் செயலமர்வு அண்மையில் நடைபெற்றது.

நாடாளுமன்றம், வெகுசன ஊடகம் மற்றும் பொதுமக்களுக்கிடையில் வலுவான உறவை கட்டியெழுப்பும் நோக்கில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில், நாடாளுமன்ற அறிக்கையிடலில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊடக நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் மு.ப. 8.30க்கு செயலமர்வு ஆரம்பமாகியது. இங்கு ஊடகவியாளர்கள் மத்தியில் உரையாற்றிய சபாநாயகர், சட்டமியற்றும் உயர்ந்த நிறுவனமான நாடாளுமன்றம் தொடர்பான அறிக்கையிடலில் மிகவும் உண்மையான தகவல்களை மக்கள்மயப்படுத்துவதில் நாடாளுமன்ற ஊடகவியலாளர்களுக்கு பாரிய பொறுப்பு காணப்படுவதாகக் குறிப்பிட்டார்.

ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு நாடாளுமன்றம், ஊடகம் மற்றும் பொதுமக்களுக் கிடையில் வலுவான உறவைக் கட்டியெழுப்புவது தொடர்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெளிவுபடுத்தினார். நாடாளுமன்ற செயலகம், நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் நாடாளுமன்ற சிறப்புரிமைகள் தொடர்பில் நாடாளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர உரையாற்றினார்.

நாடாளுமன்றக் குழு முறைமை தொடர்பில் நாடாளுமன்ற உதவி செயலாளர் நாயகம் டிகிரி கே. ஜயதிலக்க தெளிவுபடுத்தியதுடன், சட்டமியற்றும் முறை மற்றும் நாடாளுமன்ற மொழியியலின் முக்கியத்துவம் தொடர்பில் நாடாளுமன்ற சட்டவாக்க சேவைகள் பணிப்பாளர் மற்றும் தொடர்பாடல் திணைக்கள (பதில்) பணிப்பாளர் எச்.ஈ. ஜனகாந்த சில்வா ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

நாடாளுமன்றத்திலுள்ள டிஜிட்டல் முறைமையை பயன்படுத்துவது தொடர்பில் தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் மஹேஷ் பெரேரா தெளிவுபடுத்தினார். மேலும், படைக்கல சேவிதர் திணைக்களத்துடன் செயற்படும்போது ஊடகவியலாளர்களுக்கு முக்கியமான விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெளிவுபடுத்தினார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகளை அறிக்கையிடும் ஊடகவியலாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேலும் இந்த செயலமர்வில் நாடாளுமன்ற இணைப்புப் பொறியியலாளர் லலித் அதிகாரியும் கலந்துகொண்டார்.

நாடாளுமன்ற செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த செயலமர்வுக்கு என்.டி.ஐ. (National Democratic Institute) நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்தது.

## சமூக சேவையாளர் ஹாஷிம் ஹாஜியார் காலமானார்



(பீ.எம் முக்தார் )

பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த இரத்தினக்கல் வர்த்தகரும் முன்னணி சமூக சேவையாளருமான முஹம்மத் ஹாஷிம் ஹாஜியார், தனது 84 ஆவது வயதில் நேற்று முன்தினம் ( 29 ) மாலை காலமானார்.

பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடம், சீனன் கோட்டை ஸகாத் கமிட்டி, சீனன் கோட்டை அஸ்ஸலாஹ் அரபிக் கல்லூரி ஆகியவற்றின் நிர்வாக உறுப்பினரும் மற்றும் சீனன் கோட்டை அல் ஹ_மைஸரா தேசிய பாடசாலை அபிவிருத்திச்சங்க முன்னாள் உறுப்பினருமான இவர் 7 பிள்ளைகளின் தந்தையாவார்.

அன்னாரின் ஜனாஸா இன்று 30 ஆம் திகதி வியாழக்கிழமை ளுஹர் தொழுகையை அடுத்து சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

## ஒரு வாரமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்திருக்கும் மக்கள்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)



கொழும்பில் எரிபொருள் நிறுத்தப்பட்ட நிலையிலும் வாகனச் சாரதிகள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒருவார காலமாக நீண்ட வரிசைகளில் காத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை தலை நகரில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இராணுவத்தினரால் டோக்கன்களும் வழங்கப்பட்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

மாளிகாவத்தை ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முச்சக்கரவண்டி சாரதிகள்இ மோட்டார் சைகிள் ஓட்டுநர்கள்இ கார் சாரதிகள் பல நாட்களாக இரவு பகல் என்று பாராது நீண்ட வரிசைகளில் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில் மாளிகாவத்தை ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் வரிசைகளில் நின்ற ஆட்டோ சாரதிகளிடம் தாங்கள் வந்த ஒழுங்குப்படி பெயர்களை குறித்து நோக்கன் இலக்கம் வழங்குமாறு கோரியிருக்கின்றார். அதன்படி அவர்கள் டோக்கன் இலக்கம் வழங்கிய நிலையில் நேற்று குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையில் இருந்த இராணுவத்தினர் வேறாக பதிவு செய்து நோக்கன் வழங்கியபோது அங்கு பதட்ட நிலை ஏற்பட்டதுடன் சாரதிகள் பஞ்சிகாவத்தை வீதிகளில் கூடி வீதியை மறிக்க முற்பட்டனர். எனினும் சிறிது நோரம் வீதி மறிக்கப்பட்டது. பின்னர் அவர்கள் ஒதுங்கிக் கொண்டனர்.

எனினும் எரிபொருளுக்காக அவர்கள் காத்திருப்பதுடன் தமக்கு தொழிலும் இல்லை நிம்மதியும் இல்லை என்றும் கையில் இருந்த பணமும் முடிவடைந்து அவதிப்பட்டுக் கொண்டிருப்பதாக தெரிவித்தனர்.

## உப பொலிஸ் பரிசோதகர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை

### கனேமுல்லயில் சம்பவம்

கனேமுல்ல விசேட அதிரடிப்படைக்குரிய ஆயுத களஞ்சியசாலையின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகரொருவர் நேற்று (30) காலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

நேற்று (30) காலை 7 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் பின்னர் படுகாயங்களுக்குள்ளாகிய பொலிஸ் அதிகாரி ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

59 வயதான உப பொலிஸ் பரிசோதகர் குணசேகரவே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கான காரணம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## ரமழான் சுவனச்சோலை நிகழ்ச்சியில் வெற்றிபெற்றவர்கள் கௌரவிப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

புனித ரமழானைச் சிறப்பிக்கும் முகமாக ஆர்.ஜே.மீடியா கலை, கலாசார ஊடக வலையமைப்பு மற்றும் சீகாஸ் உயர்கல்வி நிறுவனமும் இணைந்து இவ்வருடம் நடத்திய ரமழான் சுவனச்சோலை போட்டி நிகழ்ச்சியில் நாடளாவிய ரீதியில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான போட்டியாளர்களில் 15 பேர் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்ததாக கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. இதன் போது முதல் 15 வெற்றியாளர்களுக்கும் மிகப் பெறுமதியான சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.



இந்நிகழ்வில் சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் தவிசாளர் கலாநிதி செயினுலாப்தீன் நஜ்முத்தீன், ஆர்.ஜே.மீடியா கலை, கலாசார ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் அறிவிப்பாளர் ஏ.எம். இன்ஷாப், சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் பதிவாளர் நாயகமும் செயலாளருமான நூருல் நப்கா இல்யாஸ் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### 30.06.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 132 3348 | 144 0362 |
| கனேடியன் டொலர் | 163 1740 | 176 0223 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 2051 | 44 3037 |
| யூரோ | 26 3034 | 277 0740 |
| ஜப்பான் யென் | 1 4808 | 1 6 5 |
| சிங்கப்பூர் டொலர் | 143 4638 | 154 834 |
| ஸ்ரேலிங் பவுன் | 32 27 | 336 137 |
| சுவிஸ் பிராங் | 260 2656 | 276 7057 |
| ஐ.அ.டொலர் | 244 65 0 | 256 0135 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 843 4350 |
| குவைட் | குவைட் தினார் | 0,062 4686 |
| ஓமான் | ஓமான் றியால் | 823 6253 |
| கட்டார் | கட்டார் றியால் | 86 8776 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 84 8027 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86 8656 |



# மரக்கறி கடை மற்றும் ஆறு சில்லறைக் கடைத்தொகுதிகள் முற்றாக தீக்கிரை

## பதுளையில் சம்பவம்



(ஆர்.சுரேஷ் குமார்)

பதுளை - சாயன வீதியில் அமைந்துள்ள சந்தைத் தொகுதியில் மரக்கறி கடை மற்றும் 06 சிறிய சில்லறை கடைத்தொகுதிகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன. இச்சம்பவம் நேற்று முன்தினம் (29) இரவு 9.20 மணியளவில் இடம்பெற்றதாக பதுளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியாதபோதிலும் பொலிஸார், பொதுமக்கள் மற்றும் பதுளை மாநகர தீயணைப்புப் படையினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதோடு, இச்சம்பவம் தொடர்பில், மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வாகனப் போக்குவரத்து குறைவு

(உக்குவளை நிருபர்)

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாத்தளை மற்றும் உக்குவளை பிரதேசங்களில் வாகனப் போக்குவரத்துகள் குறைந்துள்ள அதேவேளை, அன்றாடம் வாடகைப் பயணங்கள் மேற்கொள்ளும் முச்சக்கரவண்டிகளின் போக்குவரத்துகளும் வெகுவாகக் குறைந்துள்ளன.

முன்பெல்லாம் வாடகைப் பயணங்களுக்காக முச்சக்கரவண்டிகள் அதிகளவில் பிரதான வீதியோரங்களில் காணமுடிந்தாலும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் தத்தம் அத்தியாவசிய தேவைகள் உட்பட அவசர நோயாளிகளை வைத்தியசாலைகளுக்குக் கொண்டுசெல்வதிலும் வாகன வசதிகளின்றி பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், குறிப்பிட்ட நேரங்கள் என்றில்லாது அபூர்வமாக இ.போ.ச. பஸ் மற்றும் தனியார் பஸ்கள் ஒன்றிரண்டு போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடுதைக் காணமுடிகிறது.

வர்த்தக நிலையங்களிலும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக அவற்றைக் கொள்வனவு செய்வதிலும் முன்பு போல மக்கள் ஆர்வம் காட்டும் நிலைமையும் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மலையக சமூகத்தினரும் சகல உரிமைகளையும் பெற்றுவாழ அரசியல் தலைமைகள் ஒன்றுபட வேண்டும்

## மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இராஜாராம்

(தலவாக்கலை நிருபர்)



இந்திய வம்சாவளி பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் குடியேறி 200 வருடங்களாகின்றன. இன்னும் ஏனைய சமூகங்கள் அனுபவிக்கும் உரிமைகளை அனுபவிக்க முடியாமல் ஓரங்கட்டப்பட்ட சமூகமாக வாழ்ந்து வருகின்றார்கள் - என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம் தெரிவித்துள்ளார்.

மேலும், ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்கள் தேர்தல் காலங்களில் வழங்கும் வாக்குறுதிகள் ஆட்சிக்கு வந்தபின்னர் வாக்குறுதிகளை பற்றி சிந்திப்பதே இல்லை. இன்றும் இம் மக்கள் வசதிகள் இல்லாமல் உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லாமல் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் சகல உரிமைகளையும் பெற்று ஏனைய சமூகங்களைபோல வாழவேண்டுமானால் இவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் தங்களது சுயநலத்தை மறந்து ஒன்றுபட்டு இம் மக்களின் உரிமைக்காக குரல் எழுப்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நாட்டிற்கு வெளிநாட்டு வருமானத்தை பெற்றுக்கொடுத்துவரும் பெருந்தோட்டத் தொழிலாளர்களை இன்றும் பெருந்தோட்டக் கம்பனிகள் கொத்தடிமைகளாகவே வழிநடத்துகின்றன. இன்று நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பெருந்தோட்ட தரிசு நிலங்களில் விவசாயம் செய்வதற்காக தொழிலாளர்களுக்கு காணிகளை பிரித்துக் கொடுக்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் மனோ கணேசன் முன்வைத்த கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்தபோதிலும் அதனை எவ்வாறு தொழிலாளர்களுக்கு வழங்குவதென அறிவிக்கப்படவில்லை. இதனை சட்டமாக கொண்டுவந்து அரச வர்த்தமானியில் பிரசுரித்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யவில்லை. அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தரிசு காணிகளை தொழிலாளர்கள் விவசாயம் செய்வதற்கு வழங்க வேண்டும் எனக் கூறினாலும் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு தரிசு நிலங்களை வழங்குமா? இது எமது மக்களை ஏமாற்றும் செயலாகும்.

அதேபோல் பெருந்தோட்டப் பகுதியில் வீடுகள் கட்டப்படுகின்றன. அதற்கு முறையான காணி வீட்டு உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதில்லை. எதிர்வரும் வருடத்துடன் பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்களாகின்றன. இன்றும் முறையான சுகாதாரம், கல்வி, காணி மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. இந்த சமூகம் இந்த நாட்டில் சகல உரிமைகளையும் பெற்று ஏனைய சமூகங்களைபோல் உரிமை பெற்று ஓர் அர்த்தமுள்ள சமூகமாக மாற்றுவதற்கு மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.

# தீப்பரவி எரிந்த ராணி தோட்டக் குடியிருப்புகள்

# ஒரு வருடம் கடந்த நிலையிலும் தற்காலிக கொட்டிலில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்கள்

## நிரந்தர வீடுகளை அமைத்துத் தர கோரிக்கை

(நுவரெலியா நிருபர்)

ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா புரவுன்சீக் ராணி தோட்டப் பிரிவில் கடந்த ஆண்டு (17.03.2021) அன்று மதியம் 20 குடியிருப்புகொண்ட தொடரில் தீப் பரவியதால் முற்றாக எரிந்து நாசமாகியது. இதனால் அங்கு குடியிருந்த தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் ராணி தோட்ட அரச பாடசாலையில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

அக்காலகட்டத்தில் தோட்ட நிர்வாகம், அரசியல்வாதிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் என்பன இவர்களுக்கான உணவு, உடை மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என அனைத்தையும் வழங்கி அவர்களுக்கான உதவிகளையும் செய்திருந்தனர்.

ஒரு வாரம் இவ்வாறு வழங்கப்பட்ட நிலையில், பின்னர் தோட்டப் பாடசாலையில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகின. அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தங்களின் சொந்த குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த சமையல் குடிசையில் குடியேறியதோடு சிலர் தங்கள் உறவினர்களின் இல்லங்களில் தங்கியிருந்தனர்.

இவ்வாறு காலம் கடந்தபோது தோட்ட நிர்வாகத்தால் 30 கூரைத்தகடுகளும் 04 மரக் கம்புகளையும் வழங்கி தற்காலிக கொட்டில் அமைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர். அதனைத் தொடர்ந்து தங்கள் சொந்த பணத்தை செலவுசெய்து தற்காலிக கொட்டில்களை அமைத்து அதில் குடியேறினார்கள். அவ்வாறு அமைக்கப்பட்ட தற்காலிகக் கொட்டில்கள் தற்போது மத்திய மலைநாட்டில் பெய்துவரும் மழையாலும் கடும் குளிர் நிலவும் நிலையிலும் அங்கு தங்கியிருக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

வீட்டு உடைமைகள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்களின் உபகரணங்களையும் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஆதங்கம் தெரிவிக்கின்றனர். சுமார் ஒரு வருடம் கடந்த நிலையிலும் இவர்களுக்கு நிரந்தர இல்லம் அமைத்துக் கொடுக்க தோட்ட நிர்வாகமோ, அரசியல்வாதிகளோ, அரசாங்கமோ இன்னமும் முன்வரவில்லையென தோட்ட வாழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும், இவ்வாறு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மின்வசதி, கழிப்பிட வசதி, குடிநீர் வசதி செய்து தராததால் இந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருவதாக கூறுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தோட்ட நிர்வாகிகள் மற்றும் அரசாங்கம் உடன் முன்வந்து இவர்களுக்கான நிரந்தர இல்லம் அமைத்து கொடுக்க முன்வர வேண்டும் என பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com










மலையக கல்வி சாதனைக்கு பெருமை சேர்க்கும் ஹட்டன் கல்வி வலயத்தில் அமைந்துள்ள ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் 130ஆவது ஸ்தாபகர் தினமும், வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஹட்டன் டி.கே.டபிள்யூ. கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம்(29) இடம்பெற்றது. இதன்போது பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க.கிஷாந்தன்)

# ஜாதிக சம்பதவின் ரூ. ஒரு கோடியே இருபது இலட்சம் கொட்டகலை நகருக்கு






தேசிய லொத்தர் சபையினால் தினந்தோறும் சீட்டிழுப்பு மேற்கொள்ளப்படும் ஜாதிக சம்பத லொத்தர் சீட்டின் (2022 ஜூன் 29) சீட்டிழுப்பு மேற்கொள்ளப்பட்ட 1279ஆவது தடவையின் லொத்தர் சீட்டில் சுப்பர் பரிசு வெல்லப்பட்டுள்ளது என்பதை நாம் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். அந்த சுப்பர் பரிசின் பெறுமதி ஒரு கோடியே இருபது இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று தொன்னூறு ரூபா மற்றும் நாற்பது சதம் (1,20,89,290.40).

அந்த மிகப்பெரிய சுப்பர் பரிசை வென்றிருப்பது கொட்டகலை பகுதியில் தேசியலொத்தர் சபையின் விற்பனை முகவர் ஈ.எம்.ஜயவத்தியின் லொத்தர் சீட்டிலாகும். ஜாதிக சம்பத 2022 ஜூன் 01ஆம் திகதிமுதல் தினசரி சீட்டிழுப்பை ஆரம்பித்தது தொடக்கம் தினந்தோறும் மில்லியனர்களை உருவாக்கி வருவதோடு இலட்சக்கணக்கான பணப் பரிசுகளை பகிர்ந்தளித்துள்ள ஜாதிக சம்பத இன்று உங்களுக்கு இந்த நற்செய்தியை கொண்டுவந்துள்ளது. தினசரி சீட்டிழுப்பு மேற்கொள்ளப்படுகின்ற லொத்தர் சீட்டுகளில் நாளொன்றில் வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ள லொத்தர் சீட்டாக பெயர் பெற்றிருக்கும் ஜாதிக சம்பதவை வெல்வது மிக இலகுவானதாகும்.

ஆரம்பம் தொடக்கம் இறுதிவரை இலக்கங்கள் பொருந்தினாலும், இறுதி தொடக்கம் ஆரம்பம் வரை இலக்கங்கள் பொருந்தினாலும் அதேபோன்று வெற்றி இலக்கம் உங்களது லொத்தர் சீட்டில் எந்த இடத்தில் இருந்தாலும் ஜாதிக சம்பதவை வெல்ல முடியும். உங்களது லக்கினம் பொருந்தினால் சுப்பர் பரிசை வெல்லும் வாய்ப்பு, அதேபோன்று லக்கின அடையாளம் மாத்திரம் இருந்தாலும் பரிசு வெல்ல முடியும். நாளைய சுப்பர் கோடீஸ்வரர் அல்லது மில்லியனர் நீங்களாக இருக்கக்கூடும். அதனால் உங்களது இலக்கம் மற்றும் வெற்றி இலக்கத்தை பொருந்தச் செய்து அதிகம் அதிகம் ஜாதிக சம்பத லொத்தர் சீட்டை வாங்குங்கள்.

கோடிக்கணக்கான பணத்தை வெல்லுங்கள். நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நாளொன்றில் வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ள லொத்தர் சீட்டு ஜாதிக சம்பத ஆகும்.

# பூண்டுலோயா வைத்தியசாலைக்கு தடுப்பூசி பெற வந்தவர்கள் திருப்பியனுப்பப்பட்டமை கண்டிக்கத்தக்கது

## கொத்மலை பிரதேச சபை உறுப்பினர் பாரதிராஜா

(பீ. கேதீஷ்)

கொத்மலை பொது சுகாதார வைத்திய பிரிவுக்குட்பட்ட பூண்டுலோயா வைத்தியசாலையில் கடந்த 28ஆம் திகதி குழந்தைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் தடுப்பூசி வழங்குவதற்கான திகதி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் தடுப்பூசி பெற்றுக்கொள்வதற்கு குழந்தைகளுடன் அங்கு வருகை தந்திருந்த தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இதனால் பெரும் போக்குவரத்து சிரமத்திற்கு மத்தியில் தங்களின் குழந்தைகளுடன் அங்கு வருகைதந்த தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். இவ்வாறு செயற்பட்ட கொத்மலை பொதுச் சுகாதார வைத்திய பிரிவிலுள்ள அதிகாரிகளின் அலட்சியப்போக்கை கண்டிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொத்மலை பிரதேச சபை உறுப்பினர் இராமையா பாரதிராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

கொத்மலை பொது சுகாதார வைத்தியப் பிரிவில் அண்மையில் குழந்தைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் தடுப்பூசி வழங்கப்பட்டபோது அடுத்து வழங்கப்படும் தடுப்பூசிக்கு



அன்றைய தினமே தடுப்பூசி அட்டையில் திகதி குறிக்கப்பட்டது. அவ்வாறு குறிக்கப்பட்ட திகதிக்கு தடுப்பூசியை பெற்றுக்கொள்ள சென்றிருந்த அனைவரும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள். தடுப்பூசி வழங்கும் திகதியில் மாற்றம் நிகழுமாயின் ஓரிரு தினங்களுக்கு முன்பாக உரிய முறையில் அறிவிக்கப்பட வேண்டும். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

அதிகாரிகளின் அலட்சியப்போக்கின் காரணமாக தங்களின் குழந்தைகளுடன் வந்திருந்த தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களே அன்றைய தினம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள். நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறைக்கு மத்தியில் சிலர் முச்சக்கரவண்டிகளை வாடகைக்கு பெற்றுக்கொண்டு வந்து தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாமல் மீண்டும் திரும்பிச் சென்றுள்ளனர்.

சிலர் குழந்தைகளை கையில் சுமந்துகொண்டு நடந்து அங்கு சென்று மீண்டும் திரும்பி நடந்தே வீடுகளுக்கு சென்றுள்ளனர். சிலர் அன்றைய தினம் தங்களின் தொழில்களுக்கு செல்லாமல் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்த சென்றுள்ளனர். இதுபோலவே கர்ப்பிணித் தாய்மார்களும் அன்றைய தினம் பல்வேறு துன்பத்திற்குள்ளாகினர். இவ்வாறு பல்வேறு கஷ்டத்திற்கு மத்தியில் தடுப்பூசி செலுத்த சென்றவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிச் சென்றுள்ளனர்.

கொத்மலை பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய வகையில் தகவல்களை அப்பகுதிகளுக்கு பொறுப்பான குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருப்பாராயின், இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்காது. குழந்தைகளுக்கு உரிய தினங்களில் தடுப்பூசி வழங்கப்படவில்லையெனின் அவர்கள் எதிர்காலத்தில் பல்வேறு நோய்த் தொற்றுக்குள்ளாவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே, எதிர்வரும் காலங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்களின் அலட்சியப்போக்கை விடுத்து பொதுமக்களின் நலனில் அக்கறை செலுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

### 4 நாட்களாக காணாமல்போயிருந்த

# 3 பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு

கடந்த சனிக்கிழமை தொடக்கம் காணாமல் போயிருந்த வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த மூக்கன் சஜீவன் (வயது 38) என்ற 03 பிள்ளைகளின் தந்தை வவுனியா, குடியிருப்பு சந்தைக்கு பின்புறம் சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றார்.

கடந்த சனிக்கிழமை (25 ) காலை வீட்டிலிருந்து சென்றிருந்த நிலையில் மாலையாகியும் வீடு திரும்பவில்லை. அதனையடுத்து, அவரை தேடும் பணியில் உறவினர்களுடன் இணைந்து பொதுமக்களும் மேற்கொண்டிருந்தனர்.

எனினும், அவர் குறித்து தகவல் கிடைக்காமையினால் 27ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் உறவினர்களினால் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே நேற்று முன்தினம்(29) மாலை குடியிருப்பு குளத்திற்கு அருகாமையில் பொதுச்சந்தைக்கு பின்புறம் பகுதியில் பொதுமகனொருவர் கழிவகற்றல் நடவடிக்கைக்காக சென்ற சமயத்தில் அப்பகுதியில் சடலமொன்றினை அவதானித்துள்ளார்.

அதனையடுத்து, இவ்விடயம் பொலிஸாருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து அவ்விடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் சடலம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது காணாமல்போன சஜீவன் என்ற குடும்பஸ்தரின் சடலமே அது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### வடமாகாண அமைச்சுகளுக்கு பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட

# முறைப்பாடுகள், கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காவிட்டால் பொறுமையாக இருக்கமாட்டேன்

## வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா எச்சரிக்கை

பாதிக்கப்பட்ட பொதுமக்களால் அல்லது அமைப்புகளால் வடமாகாண அமைச்சுகளுக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காத அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் விடயத்தில் இனியும் பொறுமையாக இருக்கமாட்டேன் - என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா எச்சரித்துள்ளார்.

ஆளுநர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அதனை குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

வடமாகாணத்தில் பொதுமக்கள் சேவையை அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும். அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் பொதுமக்கள் தமது தேவையை திருப்திகரமாக பெற்றுக்கொள்ளாமை தொடர்பாகவும், அமைச்சுகள், திணைக்களங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் தொடர்பிலும் என்னிடம் பல முறைப்பாடுகள் நேரடியாக கிடைக்கப்பெற்றன. அவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் சிலவற்றுக்கு இதுவரை



நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அது தொடர்பிலும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அரச சுற்றுநிருபங்களுக்கு அமைவாக முறைப்பாடு வழங்கும் நபர் ஒருவருக்கு உரிய காலப்பகுதியில் தீர்வை முன்வைக்க வேண்டியது பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கடமையாகும்.

அரச நிர்வாகம், பொதுமக்களின் தேவைகளை இலகுபடுத்துவதற்காக கட்டியமைக்கப்பட்ட ஸ்தாபன அமைப்பாக காணப்படுகின்ற நிலையில், அதன் ஊடாக பொதுமக்களின் தேவைகள் நிறைவேற்றப்படும்போதே குறித்த ஸ்தாபனம் மக்களின் நம்பிக்கையை வென்றதாக அமையும்.

வடமாகாணத்தில் செயற்பாடின்றி மக்களை சிரமத்துக்குள்ளாக்கும் எந்தவொரு நிர்வாக கட்டமைப்பையும் ஆளுநர் என்ற ரீதியில் அனுமதிக்கப்போவதில்லை. ஆகவேதான் வடமாகாணத்தில் இதுவரை அமைச்சுகள், திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வு முன்வைக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டேன் - என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# கிளிநொச்சியில் ஆபத்துகளை எதிர்கொண்டுள்ள பெறுமதிவாய்ந்த அம்பியூலன்ஸ்கள்



(கிளிநொச்சி நிருபர்)

மத்திய சுகாதார அமைச்சினால் அம்பியூலன்ஸ் சேவையினை வலுப்படுத்தும் நோக்கில் அதிநவீன வசதிகளுடன் கூடிய 46 பென்ஸ் மற்றும் போட் ரக அம்பியூலன்ஸ்கள் வடமாகாணத்திற்கு வழங்கப்பட்டிருந்தன.

இவற்றிற்கு உற்பத்தியாளர்களால் வழங்கப்பட்ட உத்தரவாதத்தின்படி சுப்பர் டீசல் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இவற்றிற்கான சுப்பர் டீசலைப் பெறுவதில் கடுமையான சிரமங்களை சுகாதாரத் திணைக்களம் எதிர்கொண்டுள்ளது.

இதனால் சில மாவட்டங்களில் குறித்த அம்பியூலன்ஸ்கள் தற்காலிகமாக பாவனையிலிருந்து விலக்கப்பட்ட நிலையில் இருப்பதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பாராட்டத்தகுந்த விதமாக முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் தமது மாவட்ட அரச அதிபர் ஊடாக சுப்பர் டீசலைப் பெறுவதற்கு விசேட பொறிமுறையினை ஏற்படுத்தியுள்ளார். அதனால் முல்லைத்தீவில் சுப்பர் டீசலில் இயங்கும் அம்பியூலன்ஸ்கள் தொடர்ந்து பாவனையில் உள்ளன.

இருப்பினும், கிளிநொச்சி மாவட்டத்தில் பிராந்திய சுகாதாரப் பிரிவினர் சுப்பர் டீசலில் இயக்கவேண்டிய அம்பியூலன்ஸ்களை சாதாரண டீசலில் இயக்கும் முடிவினை தன்னிச்சையாக எடுத்துள்ளனர். இதனால் குறித்த அம்பியூலன்ஸ்களின் நீடித்த இயங்கு நிலை பாதிக்கப்படும் சூழ்நிலைமை உருவாகியுள்ளது.

சாதாரண டீசல் பாவனைக்கு குறித்த அம்பியூலன்ஸ்களை மாற்ற வேண்டாம் எனவும் மாற்றினால் அதன்பின்னர் ஏற்படுகின்ற பழுதுகள் மற்றும் ஏனைய உத்தரவாத சேவைகளுக்கு தாம் பொறுப்பு கூற முடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, சுகாதாரத் திணைக்களத்தின் வாகனங்களுக்குப் பொறுப்பான பகுதியினரின் அனுமதியும் இன்றி கிளிநொச்சியில் குறித்த அம்பியூலன்ஸ்கள் சாதாரண டீசலுக்கு மாற்றப்பட்டுள்ளன.

இதனால் பெறுமதிவாய்ந்த அம்பியூலன்ஸ்கள் செயலிழக்கும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளதாக சுகாதாரப் பணியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யாழிலிருந்து கடத்தப்பட்டு கிளிநொச்சியில் மீட்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் தற்கொலைக்கு முயற்சி

யாழிலிருந்து கடத்தப்பட்டதாக கூறப்பட்ட நிலையில், கிளிநொச்சியில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுமி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ள சம்பவம் அங்கு பாரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பின்னர் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த மாணவியை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம், புறநகர் பகுதியைச் சேர்ந்த 17 வயதான சிறுமி, மூன்று பேரால் வாகனத்தில் கடத்தப்பட்டதாக உறவினர்கள் முறைப்பாடு செய்தனர். அவரது கடத்தல் தொடர்பில் யாழ்ப்பாணம் முளவை பகுதியைச் சேர்ந்த 2 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த மாணவி நேற்று முன்தினம் (29) கிளிநொச்சி வைத்தியசாலை முதலாவது மாடியிலிருந்து குதித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இருப்பினும், அவர் மீட்கப்பட்டு அதே வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். பொது நூலகத்திற்கு ஜப்பான் தூதுவர் விஜயம்



(யாழ். நிருபர்)


இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு விஜயம் செய்தார்.

நேற்று முன்தினம் மதியம் 2 மணியளவில் நூலகத்துக்கு விஜயம் செய்த தூதரை மாநகர முதல்வர் மணிவண்ணன் மாலை அணிவித்து வரவேற்றார்.

நூலகத்தை பார்வையிட்ட ஜப்பான் தூதுவருக்கு நூலகத்தின் ஒவ்வொரு பகுதிகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டதுடன், வரலாற்று விடயங்கள் தொடர்பாகவும் கூறப்பட்டது. விசேடமாக அங்கு காணப்பட்ட ஜப்பானிய மொழி நூல்களையும் பார்வையிட்டார்.

இதன்போது யாழ். மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணப் பொது நூலக பிரதம நூலகர் மற்றும் நூலக அலுவலர்கள் தூதுவருக்கான விளக்கத்தை வழங்கினர்.

# ஜப்பான் தூதுவர் - கடற்றொழில் அமைச்சர் இடையே சந்திப்பு



வடக்கிற்கான மூன்று நாள் விஜயத்தினை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

சமகால அரசியல் நிலைவரங்கள், கடற்றொழில் அமைச்சின் செயற்பாடுகள், குறிப்பாக கடலட்டை உற்பத்தி உட்பட நீர்வேளாண்மை எனப்படும் பண்ணை முறையில் ஏற்றுமதித் தரத்திலான கடலுணவுகளை உற்பத்தி செய்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக ஜப்பானிய தூதுவருக்கு தெளிவுபடுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜப்பானின் உயரிய தொழில்நுட்ப அனுபவங்களும் – உதவிகளும் கிடைக்குமாயின், எமது மக்களுக்கு பயனுள்ள வகையில் அமையும் எனவும் தெரிவித்துள்ளார்.

# மன்னார் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் வாகனங்களுக்கு பெற்றோல் விநியோகம்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை (30) காலைமுதல் வாகனங்களுக்கான எரிபொருள் வழங்கப்பட்டது.

இராணுவம் மற்றும் கடற்படையின் உதவியுடன் மன்னார் பிரதேச செயலகப் பணியாளர்களின் மேற்பார்வையில் வாகனங்களுக்கு பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

மோட்டார்சைக்கிளுக்கு 1500 ரூபாவிற்கும், முச்சக்கரவண்டிக்கு 2000 ரூபாவிற்கும், கார் உட்பட ஏனைய பெற்றோல்வாகனங்களுக்கு 2500ரூபாவிற்கும் எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள ஏனைய எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் எரிபொருள் விநியோகிக்கப்படாமையினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வந்தனர்.

இந்நிலையில், மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியிலுள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை (30) காலை முதல் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு டோக்கன் அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

நீண்ட வரிசையில் நின்று அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எரிபொருளை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் பல்கலைக்கழக அதிகாரி மீது இஸ்லாமிய மாணவிகள் குற்றச்சாட்டு

யாழ். பல்கலைக்கழகத்திற்குள் புகுமுக இஸ்லாமிய மாணவிகள் மீது பகிடிவதை புரிந்ததாக கூறியதுடன் தமது மத நம்பிக்கைகள் குறித்தும் பல்கலைக்கழக ஒழுக்காற்று பிரிவுக்கு பொறுப்பான அதிகாரி பேசியதாக மாணவிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது குறித்து மாணவிகள் தரப்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டில் கூறப்பட்டதாவது,

தமது சொந்த ஊரைச் சேர்ந்த புகுமுக மாணவிகள் இருவரை பல்கலைக்கழக வளாகத்திற்குள் சந்தித்து தமது மத நம்பிக்கைகள் குறித்து பேசிய நிலையில், இதனை அவதானித்த விரிவுரையாளர் ஒருவர் பல்கலைக்கழக ஒழுக்காற்றுப் பிரிவு பொறுப்பதிகாரியிடம் முறையிட்டதாகவும் கூறியுள்ளனர்.

இதனையடுத்து, ஒழுக்காற்று பிரிவு பொறுப்பதிகாரி தனது அறைக்கு தங்களை அழைத்து பகிடிவதை செய்ததாக அச்சுறுத்தியதுடன், தங்கள் மத நம்பிக்கைகள் குறித்து இழிவாக பேசியதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதோடு, பகிடிவதை செய்யவில்லை என பல தடவைகள் தாம் கூறியதையும் பொருட்படுத்தாமல், எழுத்துமூலம் கேட்டதுடன், அதனை பல்கலைக்கழகத்திற்கு வெளியே சென்று போட்டோ பிரதி எடுத்துத் தருமாறும் தங்களை வற்புறுத்தியதாகவும் மாணவிகள் கூறியுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை, பகிடிவதைக்கு உள்ளானதாக ஒழுக்காற்று அதிகாரியால் கூறப்படும் புகுமுக இஸ்லாமிய மாணவிகள் இருவரும் யாழ். பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியம் ஊடாக கலைப்பீட மாணவர் ஒன்றியத்திற்கு சம்பவம் தொடர்பில் முறைப்பாடு வழங்கியுள்ளனர்.

அதிலும், சிரேஷ்ட மாணவிகள் தங்களுடைய ஊரைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் தங்களுடன் நட்புரீதியாக உரையாடியதுடன், அறிவுரைகளை வழங்கியதாகவும் கூறியுள்ளதுடன், பகிடிவதை செய்யவில்லை என ஒழுக்காற்று அதிகாரிக்கு கூறிய நிலையில், தங்களையும் திரும்பத் திரும்ப கடிதம் எழுதுமாறு வற்புறுத்தியதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அத்துடன், பல்கலைக்கழகத்திற்கு வெளியே சென்று போட்டோ பிரதி எடுத்துவருமாறு துன்புறுத்தியதாக கூறியுள்ளதுடன், பல்கலைக்கழக கல்வியை தொடர்வதற்கு அச்சமாக உள்ளதாக தெரிவித்துள்ளதாகவும் அந்த தகவல்கள் கூறுகின்றன.


திகதி 29.06.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4801 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,899,930.00 — ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 5 7 6 3 6 9 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,591,740.40

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1279 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 13,675,890.40 — வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 9 1 3 7 9 4 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3043 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,069,180.00 — ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 10 39 55 61 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,402,784.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 831 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,932,920.00 — வெற்றி இலக்கினம் S — வெற்றி இலக்கங்கள் 20 27 43 50 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 116,677,046.80

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 110 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,124,720.00 — இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 06 25 29 57 — விசேட இலக்கினம் ரிஷபம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,717,529.00

கோடி 25+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1149 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,798,320.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 259,159,470.00 — I 03 11 13 43 74 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 — தொலைநகல்: 011-4669475 — Email : info@nlb.lk — Web : www.nlb.lk

# அம்பாறை மாவட்ட அதிபர், ஆசிரியர்களின் பணிப்பகிஷ்கரிப்புக்கு அதிகாரிகளால் தீர்வு

**கைவிடப்பட்டது போராட்டம்**

(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் கோரிக்கைக்கிணங்க எரிபொருள் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட பாடசாலை பகிஷ்கரிப்பை தற்காலிகமாகக் கைவிடுவதாக இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.




தங்களது உரிமையின் நிமித்தம் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர்களுக்கு சங்கம் தமது நன்றியைத் தெரிவித்துள்ளது.

பாடசாலை பகிஷ்கரிப்புத் தொடர்பான எமது அறிவிப்பினைத் தொடர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் ஆளுநர் நடத்திய கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு எரிபொருட்களை வழங்குவதற்கு வழிசெய்வதுடன், பாடசாலை நாட்களை மூன்றாகக் குறைப்பதெனவும் அறிவித்துள்ளார். இதனை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர். வலயக் கல்விப் பணிமனை உயர் அதிகாரிகளும் இதற்கான உறுதிமொழிகளை எழுத்துமூலம் வழங்கியுள்ளனர்.

இவ்வாறான சாதகமான சூழ்நிலையொன்று ஏற்படும்போது பணிப்பகிஷ்கரிப்பினைக் கைவிடுவதன் அவசியத்தை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மட்டத்திலும் கோரிக்கை விடுக்கப்பட்டதன் நிமித்தம் இன்று (01) முதல் பாடசாலைக்குச் செல்வதற்கான அழைப்பினை விடுப்பதென சங்கத்தின் உயர்பீடம் தீர்மானித்துள்ளது.

போராட்டங்கள் என்பது யாரையும் எதிர்ப்பதல்ல. எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான கதவுகளைத் திறக்கவைப்பதே. அவ்வகையில் ஆசிரியர்களது பிரச்சினைகள் அதிகாரிகளின் காதுகளை சென்றடைய உதவிய அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்விடயம் தொடர்பில் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவந்த மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அம்பாறை மாவட்ட கல்வி வலயங்களின் பணிப்பாளர்களுக்கும் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாகவும் அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு ஒரு நாள் உளவளத்துணை கருத்தரங்கு



(அம்பாறை நிருபர்)

அரச திணைக்களங்களில் பணிபுரிந்துவரும் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கான ஒரு நாள் உளவளத்துணை கருத்தரங்கு நாடுபூராகவும் இடம்பெற்று வருகின்றன.

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேச செயலகத்தில் இணைப்பு செய்யப்பட்ட பல்வேறு அரச திணைக்களங்களில் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களாக கடமையாற்றுபவர்களுக்கான உளவளத்துணை கருத்தரங்கு பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எம்.அபுல் ஹசன் தலைமையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எஸ்.எஸ்.ஹஸன், எம்.ஏ.எவ்.ரினோபா ஆகியோரின் ஒழுங்குபடுத்தலின் ஊடாக கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சிறப்பாக இடம்பெற்றன.

இக்கருத்தரங்கானது பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், இக்கருத்தரங்கில் 'தற்கொலை மற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தல்' எனும் தொனிப்பொருளில் உளவளத்துணை தொடர்பில் விழிப்பூட்டல் வழங்கப்பட்டது.



இக்கருத்தரங்கில் கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உளவளத்துணை தொடர்பாக சிறப்புரை ஒன்றினை ஆற்றியிருந்ததுடன், வளவாளர்களாக கல்முனை பிரதேச செயலக உளவளத்துணை அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ஐ.ஹபீபா மற்றும் எம்.எச்.எம்.இம்தீஸா ஆகியோர் கலந்துகொண்டு செயலமர்வினை சிறப்பித்து நடத்தியிருந்தனர்.

# மட்டக்களப்பு மாவட்ட சர்வமத பேரவையினால் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைக்கான செயலமர்வு

(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட சர்வமத பேரவையின் ஏற்பாட்டில் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை தொடர்பான பயிற்சி மட்டக்களப்பு கல்லடியில் கடந்த செவ்வாய்க்கிழமை (28) பிற்பகல் இடம்பெற்றது.






நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப்பொருட்களின் விலையேற்றம் அதேபோன்று எதிர்காலத்தில் எதிர்கொள்ளவிருக்கும் உணவுப்பஞ்சம் போன்ற விடயங்களை கவனத்திற்கொண்டு மட்டக்களப்பு மாவட்ட சர்வமத செயற்குழு, சர்வமத பேரவையினால் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய ஆர்வலர்களுக்கு நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமத பேரவையின் மாவட்ட இணைப்பாளர் ஆர்.மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா, வலய உதவி விவசாயப் பணிப்பாளர் கணேசமூர்த்தி, விவசாயப் போதனாசிரியர்களான வேணி திருனவன், முபிதா றமீஸ் மற்றும் சர்வமத தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வீட்டுத்தோட்டச் செய்கை தொடர்பாக விளக்கப் பயிற்சியும் செய்முறைப் பயிற்சியும் விவசாய போதனாசிரியர்களால் நடத்தப்பட்டது.

# மூதூர் பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை



(கந்தளாய் நிருபர்)

அரச சேவையை பொதுமக்களுக்கு இலகுபடுத்துவதனை நோக்காகக் கொண்டு மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் தலைமையில் பொதுமக்களுக்கான நடமாடும் சேவை உதவி பிரதேச செயலாளர், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், கணக்காளர், மேலதிக மாவட்ட பதிவாளர், நிர்வாக கிராம உத்தியோகத்தர் என அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் காவியா நிறுவன இணைப்பாளரின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் (29) 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் மூதூர் பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்டது.

இதில் சமூக சேவைக் கிளையின் சேவைகள், முதியோர் அடையாள அட்டை வழங்கல், காலம் கடந்த பதிவுகள் - பிறப்பு - இறப்பு- விவாக மற்றும் ஏனைய சேவைகள், தேசிய அடையாள அட்டை தொடர்பான சேவைகள், பொலிஸ் திணைக்கள சேவைகள் போன்றன இடம்பெற்றன.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு நன்மையடைந்ததோடு, குறித்த நிகழ்வுக்கு காவியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் (UNDP) இணைந்து அனுசரணை வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.



கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# உள்நாட்டு துப்பாக்கியுடன் கந்தளாயில் நால்வர் கைது



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை பேரமடு காட்டுப்பகுதியில் வைத்து சட்டவிரோதமாக அனுமதியின்றி உள்நாட்டு துப்பாக்கிகளை வைத்திருந்த நான்கு பேரை நேற்று முன்தினம் (29) கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் அக்போகம பகுதியைச் சேர்ந்த இருவரையும், கந்தளாய் அக்போபுர பகுதியைச் சேர்ந்த இருவரையும் கைதுசெய்துள்ளதாக வனஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பிராந்திய வனஜீவராசி அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளதாக வனஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களிடமிருந்து உள்நாட்டு துப்பாக்கி, கத்தி, துப்பாக்கிக் குண்டுகள், மருந்துகள் மற்றும் டோர்ச் லைட் போன்றனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்களை தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# சாய்ந்தமருதில் விவசாய உற்பத்திக் கருத்தரங்கு



(பொலிவேரியன் நிருபர்)

'ஒன்றாகப் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் விவசாய உற்பத்தி கருத்தரங்கு அண்மையில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.சபீகாவின் ஒருங்கிணைப்பில், பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முஆவிகா ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விவசாய போதானாசிரியர் எஸ்.பஸ்ரின் வளவாளராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் நாட்டின் பொருளாதாரத்தினை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகள் கலந்துகொண்ட வளவாளர்களால் வழங்கப்பட்டு, கத்தரி, மிளகாய், முளைக்கீரை, வெண்டிக்காய் போன்ற பயிர்களின் விதைகளும் தெரிவுசெய்யப்பட்ட கலைஞர் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், வீட்டுத்தோட்டம் செய்பவர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கதைமாமணி மாஸ்டர் சிவலிங்கத்தின் சிலை மட்டக்களப்பில் திறந்துவைப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

இலங்கையின் புகழ்பெற்ற கலைஞர் கலாபூஷணம் கதைமாமணி மறைந்த மாஸ்டர் சிவலிங்கத்திற்கு மட்டக்களப்பில் சிலை நிறுவப்பட்டு நேற்று (30) காலை திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்னால் இச்சிலை நிறுவப்பட்டுள்ளது.

கல்லடி சிவானந்தா வித்தியாலய பழைய மாணவர்களான சிவானந்தியன் சகபாடிகள் அமைப்பினால் நிறுவப்பட்ட குறித்த சிலையை, மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராசா சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி பாரதி கென்னடி காத்தான்குடி பொலிஸ் நிலைய போதை ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.சீ.ஜவாஹிர் உட்பட பெருமளவிலான பிரமுகர்கள், கலைஞர்கள் பலர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.



மறைந்த புகழ்பெற்ற மாஸ்டர் சிவலிங்கம் மாணவர்களுக்கு கதை சொல்வதனூடாக சிறந்த சமுதாயமொன்றைக் கட்டியெழுப்பியவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனங்களிலும் தொடர்ந்து சிறுவர் கதை சொல்லும் நிகழ்ச்சியை நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்தால் 13 இலட்சம் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளத் தயார்

## நோர்வேயில் தெரிவித்தார் சாணக்கியன் எம்.பி.

(மட்டக்களப்பு நிருபர்)

73 வருடகால தீர்க்கப்படாத தமிழர்களின் உரிமைசார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கினால் உலகளாவிய ரீதியில் உள்ள 13 இலட்சம் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வார்கள். ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டும், பதவி விலகாவிடின் குறைந்தபட்சம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கினால் 13 இலட்சம் புலம்பெயர் தமிழர்கள் முதலீடுகளை மேற்கொள்ள தயாராகவுள்ளனர் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் ஒஸ்லோவிலுள்ள இலங்கையர்களை சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், பல்வேறு காலகட்டங்களில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த அல்லது வெளியேற்றப்பட்ட புலம்பெயர் இலங்கையர்களை நோர்வேயில் சந்திக்கிறேன். கடந்த இருவாரங்களில் சுவிஸ்சர்லாந்தில் 'லீடிங் வித் பாஸ்' என்ற தலைப்பில் கடந்த காலங்களில் எவ்வாறு முகங்கொடுத்தது, யுத்த காலத்திலும் அதற்குப் பின்னரான காலப்பகுதியிலும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு நாடு என்ற ரீதியில் எவ்வாறு முகம் கொடுப்பது, இதிலிருந்து எவ்வாறு வெளியேவருவது, முன்னேறி செல்வது தொடர்பில் அவதானம் செலுத்த சுவிஸ்சர்லாந்து நகரில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டேன். சுவிஸ்சர்லாந்துக்கு அண்மைய நாடாக நோர்வே உள்ளதால் இங்கு வந்துள்ளேன். வருகை தந்துள்ள அனைவருக்கும் முதலில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

விசேடமாக தற்போது இலங்கை மோசமான பொருளாதார நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளது. அதிகாரிகளும் பொதுமக்களும், பொலிஸாரும் இராணுவத்தினரும் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக்கொள்கிறார்கள். ஊழல் மோசடி, இலஞ்சம் ஆகியவை தற்போதைய நிலைமைக்கு காரணம் என குறிப்பிடுகிறார்கள். இல்லை நாட்டில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு வழங்காமலிருப்பது தற்போதைய பிரச்சினைக்கு பிரதான காரணியாக உள்ளது.



1948ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து தமிழ், முஸ்லிம், சிங்களம் என இலங்கையர்கள் வேறுபடுத்தப்படுத்தப்பட்டதால் தற்போதைய பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. இலங்கையில் தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட காரணத்தினால் தமிழர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதனை தொடர்ந்து 30 வருடகால சிவில் யுத்தம் தோற்றம் பெற்றது. கடன் பெற்று யுத்தத்திற்கு அதிக நிதி செலவிடப்பட்டது. 2009ஆம் ஆண்டு காலத்திற்கு பிறகு பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி செலவிடப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக கோட்டா கோ ஹோம், நோ டீல் கம என குறிப்பிட நேரிட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் வெட்கமில்லை, இன்றும் பதவியில் இருக்கிறார்கள்.

73 வருடகால தீர்க்கப்படாத தமிழர்களின் உரிமைசார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கினால் உலகளாவிய ரீதியில் உள்ள 13 இலட்சம் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வார்கள். ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டும், பதவி விலகாவிடின் குறைந்தபட்சம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கினால் 13 இலட்சம் புலம்பெயர் தமிழர்கள் முதலீடுகளை மேற்கொள்ள தயாராகவுள்ளனர். இலங்கையின் தற்போதைய நிலைமை கவலைக்குரியது.


இலங்கையர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளமையினை காண்கையில் வேதனையடைகிறோம். ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு மக்களின் நிலை தொடர்பில் அக்கறையில்லை. இலங்கை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் முடியும். இலங்கை பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டால் அதன் தாக்கம் வடக்கு மற்றும் கிழக்கு மக்களையும் செல்வாக்கு செலுத்தும்.

ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டும் பதவி விலகாவிடின் குறைந்தபட்சம் தமிழர்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை பெற்றுக்கொள்ள வேண்டும். பிளவுபடாத இலங்கைக்குள் தீர்வினையே கோருகிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கோயிலுக்குச் சென்று திரும்பிய பெண் யானையின் தாக்குதலில் உயிரிழப்பு

## குடாவெட்டை பகுதியில் சம்பவம்





(மண்டூர் நிருபர்)

கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஈரளக்குளம், குடாவெட்டை பகுதியில் நேற்று முன்தினம் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி வயோதிப்பெண்ணொருவர் பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்னர்.

ஈரளக்குளம் குடாவெட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயான (வயது 62) குஞ்சித்தம்பி தேவராணி என்பவரே இந்த தாக்குதலில் அகப்பட்டு மரணமானவராவார்.

சம்பவ தினத்தன்று மாலைவேளையில் தனது வீட்டிலிருந்து வழிபாட்டிற்காக ஈரளக்குளம் சிவன்கோயிலுக்கு சென்று காலையில் வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போது பனைமரங்கள் நிறைந்த காட்டுக்குள் மறைந்திருநந்த யானை தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் பிரதேசவாசிகளின் உதவியுடன் மாவடிவேம்பு வைத்தியசாலைக்கு கொண்டுசென்று சேர்த்தபோது சிகிச்சை பலனின்றி குறித்த பெண் உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்தார். மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுகாதாரப் பரிசோதகர்களின் வேலை நிறுத்தம் காரணமாக மட்டு. மாவட்டத்தில் சுகாதார நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்

(மட்டக்களப்பு நிருபர்)

தமக்கு எரிபொருள் வழங்குமாறு கோரி பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த இரு நாட்களாக மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் உட்பட சுகாதார நடவடிக்கைகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இம்மாவட்டத்தில் சுகாதார வைத்தியதிகாரி பணிமனைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளில் கடமைபுரியும் அனைத்து பொது சுகாதாரப் பரிசோதகர்களும் நேற்று (30) பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் உட்பட பல்வேறு சுகாதாரத்துறை சார்ந்த நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.




மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.




எரிபொருளின்மையால் தமது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்ற முடியாதுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# 4 வயது சிறுவனை கடத்த முயன்ற முதியவர் பொதுமக்களால் மடக்கிப்பிடித்து நையப்புடைப்பு

(மாவடிப்பள்ளி, சம்மாந்துறை நிருபர்கள்)

சிறுவனொருவனை கடத்த முற்பட்ட வயோதிபர் ஒருவர் சம்மாந்துறையில் பொது மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (29) இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது,

4 வயதையுடைய சிறுவன் சம்மாந்துறை ஹிஜ்ரா 5ஆம் வீதியில் இயங்கும் முன்பள்ளி பாலர் பாடசாலையிலிருந்து நண்பகல் ஒரு மணியளவில் வீடு திரும்பிக்கொண்டிருந்த போது அவ்வீதியில் நின்றிருந்த 55 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் சிறுவனை வாகனம் ஒன்றில் கடத்த முற்பட்டுள்ளார்.

இதன்போது சிறுவன் கூக்குரலிட்டு அழுதுள்ளான். இதனை அவதானித்த அவ்வீதியில் நின்றிருந்த பொதுமக்கள் சிறுவனை அவ்வயோதிபரிடமிருந்து காப்பாற்றியதோடு அவ்வயோதிபரை நையப்புடைத்து சம்மாந்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து ஒரு தொகை மருந்துகள், சிறிஞ், ஊசி மற்றும் பாடசாலை மாணவர்களின் உடைகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

# எரிபொருள் விநியோகத்தில் முறைகேடு; ஓட்டமாவடியில் மக்கள் ஆர்ப்பாட்டம்







(கல்குடா நிருபர்)

ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தனிப்பட்ட சிலருக்கு பெற்றோல் விற்பனை இடம்பெறுவதாகக் கூறி பொதுமக்கள் நேற்று முன்தினம் (29) இரவு ஐந்து மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை (24) அரச உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஓட்டமாவடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஓட்டமாவடி பிரதேச செயலக அதிகாரிகளின் மேற்பார்வையில் பெற்றோல் விநியோகம் வழங்கப்பட்ட நிலையில், கடந்த சனிக்கிழமை அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டதுடன், பெற்றோல் பம் பழுதடைந்த நிலையில் பெற்றோல் விநியோகம் நிறுத்தப்பட்டிருந்தது.

பழுதடைந்த பெற்றோல் பம் நேற்று முன்தினம் திருத்தப்பட்ட நிலையில், பெற்றோல் விநியோகம் இடம்பெற்றுள்ளது. பொதுமக்களுக்கு பெற்றோல் விநியோகம் இடம்பெறவில்லை. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஊழல் இடம்பெறுகின்றது. இரவு நேரங்களில் தனிப்பட்டவர்களுக்கு தொடர்ந்து எரிபொருள் வழங்கப்படுகின்றது என்று கூறி எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய பொதுமக்கள் மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் ஓட்டமாவடி மேம்பாலத்திற்கு முன்பாக வாகன போக்குவரத்தை மறித்து தங்களது போராட்டத்தை தொடர்ந்தனர்.

அவ்விடத்திற்கு வருகைதந்த வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடிய போது எரிபொருள் நிலையத்திலுள்ள இருப்பை பொதுமக்களுக்கு காட்டினால் ஆர்ப்பாட்டத்தை கைவிடுவதாக தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திலிருந்து எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு ஆர்ப்பாட்டக்காரர்களை அழைத்துச்சென்ற வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி மற்றும் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஆகியோருடன் தொலைபேசியில் உரையாடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருப்பை பரிசோதிப்பது என்றும் இருப்பு இருக்கும் பட்சத்தில் அதனை பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு தான் பொறுப்பு நிற்பதாகவும் தெரிவித்ததற்கிணங்க ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

எரிபொருள் இருந்தால் விநியோகிக்கப்படும் என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கமைய மோட்டார் சைக்கிள்களும் முச்சக்கரவண்டிகளும் நீண்ட வரிசையில் நின்றன.

# சுயதொழிலை முன்னேற்ற சுழற்சிமுறையில் கடனுதவி

## தம்பலகாமத்தில் வழங்கிவைப்பு



(கிண்ணியா நிருபர்)

சுயதொழில் முயற்சியாண்மையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் மகளிர் சிறுவர் விவகார அமைச்சின் அனுசரணையில் சுழற்சி முறை அடிப்படையில் கடன் வழங்கும் நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (29) இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வேண்டுகோளுக்கிணங்க இடம்பெற்ற குறித்த நிகழ்வில், இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலை பிராந்திய முகாமையாளர் வளவாளராக கலந்துகொண்டதுடன், வருமான மீட்டல் தொடர்பில் தெளிவுபடுத்தினர்.

இதில் தெரிவுசெய்யப்பட்ட மகளிர் சங்கங்களை உள்ளடக்கிய 15 பெண் சுயதொழில் முயற்சியாண்மையாளர்களுக்கு சுழற்சிமுறை கடன் வழங்கப்பட்டது.

இதில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கே.பாமினி, நஸ்ரின் டிலானி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.




# உண்போம் உணவளிப்போம் திட்டம்

## காத்தான்குடி இளைஞர்களால் முன்னெடுப்பு




(காத்தான்குடி நிருபர்)

"உண்போம் உணவளிப்போம்" எனும் திட்டத்தின்கீழ் வீடுகளில் சமைத்த உணவுப் பொதிகளை பொதுமக்களிடம் இருந்து பெற்றுக்கொண்டு தற்போதைய அசாதாரண நிலையில் தொழில்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவு வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் (29) குட்வின் சதுக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

காத்தான்குடியில் இயங்கிவரும் இளைஞர் வலுவூட்டலுக்கும் சமூக அபிவிருத்திக்குமான அமைப்பின் (YESDO) ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இத்திட்டத்தின் ஊடாக முதற்கட்டமாக நேற்று முன்தினம் சுமார் 17 குடும்பங்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



*எரிபொருள் கப்பல் ஜூலை 22 வரை வராதாம் எண்ட சொல்லுறதுக்கு ஒரு பிரதமர் பதவி தேவையாடாப்பா.*

*ஏண்டா இன்னும் மக்கள பேய்காட்டி சாகடிக்கிறயள். இந்த லெட்சணத்தில சும்மா காரியாலயங்களையும், பள்ளிக்கூடங்களையும் துறந்து வைத்து ஆருக்கு பேய்க்காட்டிறயள். உட்டுத்தள்ளிப்போட்டு பேசாம பதவி விலகிறத்த பாருங்க. ஆராவது பொருத்தமானவர்கள் ஏதும் செய்யட்டும்!*

# அக்கரைப்பற்றில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு அபராதம்

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைபற்று பிரதேசத்தில் காலாவதியான பொருட்களை விற்பனைக்கு காட்சிப்படுத்தியமை, விற்பனை செய்தமை ஆகிய குற்றங்களுக்காக கடை உரிமையாளர்களுக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் நுகர்வோர் அலுவல்கள் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது இரு இடங்களில் இனங்காணப்பட்ட கடை உரிமையாளர்களுக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு 8000 ரூபா மற்றும் 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதான வீதியிலுள்ள கடையொன்றின் உரிமையாளர் ஒருவர் பட்டர் மற்றும் ரஸ்க் பக்கட்டுகளில் பொறிக்கப்பட்டிருந்த விலையை துடைத்தழித்தமை, காலாவதியான சிப்ஸ் பக்கட்டை ஏனைய பொருட்களுடன் சேர்த்து விற்பனை செய்தமை என்பவற்றுக்காக 5000 ரூபாவும், விலை காட்சிப்படுத்தப்படாத பல்புகளுக்காக 3000 ரூபாவுமாக மொத்தமாக 8000 ரூபா அபராதம் விதிக்கபட்டுள்ளது.

பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் இன்னுமொரு கடை உரிமையாளர் ஒருவருக்கு காலாவதியான பேபி க்ரீமை விற்பனைக்கு காட்சிப்படுத்தியமைக்காக 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

# சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

(கோணாவத்தை நிருபர்)

திருக்கோவில் பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்ட தாண்டியடி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

180 மில்லி லீற்றர் அரச மதுபானத்தையும், 625 மில்லி லீற்றர் அரச பியர் ஆகியவற்றையும் அனுமதிப்பத்திரமின்றி விற்பனை செய்தமைக்காக நபர் ஒருவரை திருக்கோவில் பொலிஸார் கைதுசெய்து அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் ஆஜர்செய்தபோது மேற்படி குற்றங்களுக்காக பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

அண்மைக்காலமாக திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அனுமதிப் பத்திரமின்றி போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானின் புலமைப்பரிசிலுக்கு தகுதியானோரை இனங்காண கிழக்கு மாகாணத்தில் எழுத்துப் பரீட்சை

(மாளிகைக்காடு நிருபர்)

பாகிஸ்தான் அரசினால் வழங்கப்படும் அல்லமா இக்பால் புலமைப்பரிசில் பெற தகுதியானவர்களை தெரிவுசெய்ய நடத்தப்படும் எழுத்துப்பரீட்சை நேற்று முன்தினம் (29) மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர் முனீரா பாலிஹா மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

பாகிஸ்தான் பல்கலைக்கழகத்தில் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் கல்வி பயில இதன்மூலம் வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கான முழுச் செலவுகளும் பாகிஸ்தான் அரசினால் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் இலங்கையின் பல்லினங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் கடந்த காலங்களில் பயன் பெற்றுள்ளனர் என பாகிஸ்தான் தூதரக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு, குருநாகல், கண்டி போன்ற நகரங்களில் மட்டுமே இடம்பெற்றுவந்த இந்தத் தேர்வானது வழமைக்கு மாறாக கடந்த ஆண்டுமுதல் கிழக்கில் பாகிஸ்தான் உயர்கல்வி ஆணையக உயரதிகாரிகள் மற்றும் தூதரக அதிகாரிகளினால் நேரடியாக நடத்தப்படுகிறது.

இந்த பரீட்சையில் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த 150 பேரளவில் கலந்துகொண்டனர். இதனை தொடர்ந்து மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஆலய உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

## இந்திய ஜனாதிபதித் தேர்தல்:

# திரௌபதி - யஷ்வந்த் சின்ஹாவின் வேட்புமனுக்கள் ஏற்பு



திரௌபதி முர்மு மற்றும் யஷ்வந்த் சின்ஹா ஆகியோரின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் இம் மாதம் 24ஆம் திகதி முடிவடையவுள்ளது. இந்நிலையில், புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான தேர்தல் இம்மாதம் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் மத்தியில் ஆளும் பா.ஜ.க. கூட்டணி சார்பில் ஒடிசா பழங்குடியினத் தலைவரும், ஜோர்கண்ட் மாநில முன்னாள் ஆளுநருமான திரௌபதி முர்மு (வயது 64) போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து முன்னாள் மத்திய நிதி அமைச்சர் யஷ்வந்த் சின்கா (வயது 84) எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக களத்தில் உள்ளார்.

இந்நிலையில், டில்லியில், திரௌபதி முர்மு மற்றும் யஷ்வந்த் சின்ஹா ஆகியோர் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர். 115 வேட்பு மனுக்களில் 28 வேட்புமனுக்கள் ஆரம்பத்திலேயே நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. திரௌபதி முர்மு மற்றும் யஷ்வந்த் சின்ஹா ஆகியோரின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. 87 வேட்பு மனுக்களில் 79 மனுக்கள் உரிய தகுதிகளை பூர்த்திசெய்யாததால் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையைச் சேர்ந்த மேலும் நால்வர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்

## நடுக்கடலில் தவித்தவர்களை மீட்ட இந்திய கடலோர காவல் படை



தனுஷ்கோடி அருகே நடுக்கடலிலுள்ள 4ஆவது மணல்திட்டில் தவித்த இலங்கை தமிழர்களை கடலோர காவல் படையினர் மீட்டு கரைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதிமுதல் தற்போதுவரை இராமேஸ்வரத்தை அடுத்த தனுஷ்கோடிக்கு 90 பேர் அகதிகளாக சென்றுள்ளனர். அவர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இலங்கையிலிருந்து பிளாஸ்ரிக் படகில் வந்த இலங்கைத் தமிழர்கள் தனுஷ்கோடி அருகே நடுக்கடலிலுள்ள 4ஆவது மணல்திட்டில் இறக்கி விட்டுவிட்டு படகு திரும்பிச் சென்றுள்ளது. அப்போது அங்கு ரோந்து பணியிலிருந்த இந்திய கடலோர காவல் படையினர் நடுக்கடலில் தவித்துக் கொண்டிருந்த ஒரு குழந்தை உட்பட 4 பேரை மீட்டு தனுஷ்கோடி அழைத்துச் சென்றுள்ளனர். பின்னர், அவர்களை கடலோர பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இதனையடுத்து அவர்களிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# ரஷ்ய அச்சுறுத்தல்; ஐரோப்பாவில் அமெரிக்கப் படைகள் அதிகரிப்பு

## ஜோ பைடன் தெரிவிப்பு



ரஷ்யாவின் அச்சுறுத்தல் காரணமாக ஐரோப்பாவில் அமெரிக்கப் படைகளை அதிகரித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் நேட்டோ பொதுச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க்கை சந்தித்துப் பேசிய பைடன், நேட்டோ படைகளின் பலத்தை மேலும் வலுப்படுத்தவுள்ளதாக தெரிவித்தார்.

போலந்தில் ஒரு நிரந்தர தலைமையகத்தை அமெரிக்கா அமைக்கவுள்ளதாக தெரிவித்த பைடன், பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு கூடுதல் படைகள் அனுப்பப்படும் என குறிப்பிட்டார்.

**பின்லாந்து - சுவீடனுக்கு புட்டின் எச்சரிக்கை**

இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புட்டின்,

"பின்லாந்தும் சுவீடனும் நேட்டோவில் இணைவது குறித்து எந்தப் பிரச்சினையும் இல்லை. அது அவர்களுடைய விருப்பம். ஆனால், எங்களுக்கு எதிராக இராணுவக் கட்டமைப்புகளை நிறுவினாலோ தொல்லை தரக்கூடிய பிரதேசங்களில் இராணுவக் குழுக்களை நிறுத்தினாலோ தற்காத்துக்கொள்ள பதிலடி கொடுக்க தயங்க மாட்டோம். எங்களுக்கு பிராந்திய வித்தியாசங்கள் இல்லை" - என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# இஸ்ரேலின் இடைக்கால பிரதமராக யயீர் லபிட் நியமனம்



இஸ்ரேலில் நப்தாலி பென்னட் தலைமையிலான ஆட்சி கவிழ்ந்த நிலையில், இடைக்கால பிரதமராக வெளியுறவுத்துறை அமைச்சர் Yair Lapid நியமிக்கப்பட்டுள்ளார்.

8 கட்சிகளின் கூட்டணியில் ஏற்பட்ட விரிசலையடுத்து நாடாளுமன்றத்தில் ஆட்சி கலைப்பு மசோதா நிறைவேற்றப்பட்டு, பிரதமர் நப்தாலி பென்னட் பதவி விலகினார். ஒக்டோபர் இறுதியில் 5ஆவது முறையாக தேர்தல் நடைபெறவுள்ளது.

அதுவரை காபந்து அரசின் தலைவராக வெளியுறவுத்துறை அமைச்சர் Yair Lapid இருப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் தேர்தலை புறக்கணிக்கவுள்ளதாக நப்தாலி பென்னட் தெரிவித்துள்ளார்.

# உலக செய்திகள்

# 110 நாடுகளில் கொரோனா: மீண்டும் அதிகரிக்கும் தொற்று



உலகில் 110 நாடுகளில் கொரோனா தொற்று மீண்டும் அதிகரித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

கொரோனா தொற்று முடிவடையவில்லை என்று தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதனோம் கேப்ரியாசெஸ், கொரோனா தொற்று உருமாறி வருவதாக தெரிவித்தார்.

வேகமாக பரவும் ஒமிக்ரொன் துணை வகைகளான BA.4 மற்றும் BA.5 ஆகியவை அமெரிக்காவில் பதிவாகியுள்ள கொரோனா தொற்றில் 50 சதவீதம் இருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

# மணிப்பூரில் மண்சரிவு: 7 பேர் பலி; பலர் மாயம்



மணிப்பூரில் மண்சரிவில் சிக்கி 7 பேர் உயிரிழந்துள்ளனர். 13 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதுடன், பலர் காணாமல்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மணிப்பூர் மாநிலம் நோனி மாவட்டத்தின் துபூல் ரயில் நிலையம் அருகே கடும் மண்சரிவு ஏற்பட்டது. இதில் இராணுவ வீரர்கள் மூலம் 13 பேர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மண்சரிவில் சிக்கி காணாமல்போன பிராந்திய இராணுவ வீரர்கள் 55 பேர் மற்றும் தொழிலாளர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மீட்புப் பணியில் இராணுவம், அசாம் ரைபிள்ஸ் குழு ஈடுபட்டு வருகின்றனர். மண்சரிவால் பாறைகள் சரிந்து ஆற்றின் குறுக்கே விழுந்ததால் ஏராளமானோர் புதையுண்டு இருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கார் + பைக்கை ஒன்றிணைத்து உருவான ஹைபிரிட் மின்சார வாகனம்



பிரித்தானியாவில் கார் மற்றும் இரு சக்கர வாகனத்தை மொடலாகக்கொண்டு உருவாக்கப்பட்ட ஹைபிரிட் மின்சார வாகனம் பொதுமக்கள் கவனத்தை ஈர்த்துள்ளது.

நோர்தன் லைட் மோட்டார்ஸ் தொடக்க நிலை நிறுவனம் உருவாக்கியுள்ள இலகு ரக வாகனம், ஒருவர் சொகுசாக பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வீதியில் வாகனம் சோதனை ஓட்டம் நடைபெற்ற நிலையில், கூடுதல் அம்சங்களுடன் வாகனம் விரைவில் வெளிவரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 61ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது மக்கள் வங்கி

PEOPLE'S BANK
61
ANNIVERSARY



இலங்கையின் வங்கி மற்றும் நிதித்துறையின் புதியதோர் மைல்கல்லைக் கடந்துள்ள மக்கள் வங்கியானது நிறுவப்பட்டு ஜூலை 1ஆம் திகதியன்று, 61 ஆண்டு காலம் பூர்த்தியாகின்றது. இந்நாட்டு சாதாரண பொதுமக்களுக்கு வங்கியியலை பழக்கப்படுத்தியதும் மக்கள் வங்கியேயாகும். தமது 61ஆவது ஆண்டினை பூர்த்தி செய்திடும் இவ்வேளையில் டிஜிட்டல் நிதிச் சேவைகளை இந்நாட்டு கிராமங்களுக்கும் வியாபிக்கச்செய்து டிஜிட்டல்மயமாக்கலின் அனுகூலங்களை முழு நாட்டுக்கும் பெற்றுக் கொடுப்பதில் முன்னோடியாகத் திகழ்வதுடன், தேசத்துக்கு அபிமானத்துடன் இந்நாட்டு சமூக, பொருளாதாரத்தின் மறுமலர்ச்சிக்கு தொடர்ச்சியான பங்களிப்பினை வழங்குதலும் மிகவும் முக்கியமான விடயமாகும்.

இலங்கையின் கூட்டுறவு வியாபாரம், கிராமிய வங்கி முறைமை மற்றும் கிரரமிய மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்பிடும் நோக்கத்துடன் 1961, 29ஆம் இலக்க சட்டத்தின் கீழ் மக்கள் வங்கி நிறுவப்பட்டது. பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியின்போது, அப்போதைய அரசின் வியாபாரம், உணவு, கூட்டுறவு மற்றும் கடற்படை விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த டீ.பீ.இலங்கரத்னவால் அச்சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதேபோல் அப்போதைய காலகட்டத்தில் கூட்டுறவுத் துறைக்கு பாரிய சேவைகளைப் புரிந்துவந்த வின்சன்ட் சுபசிங்ஹ, மக்கள் வங்கியின் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கற்றோருக்கும் வசதியானோருக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வங்கி முறைமை மக்கள் வங்கியின் தோற்றத்துடன் மாற்றப்பட்டது. அதன் விளைவாக, தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்ட முதலாவது வங்கியாகவும் மக்கள் வங்கி விளங்குகிறது.

அதேபோல் ஆரம்ப காலகட்டத்தில் கமத்தொழில், தோட்டத்துறை பொருளாதாரம், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்றுறைகள் மற்றும் அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொள்ள வெவ்வேறுபட்ட கடன் வசதித் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. சாதாரண மக்களை சேமிப்புப் பழக்கத்திற்கு ஊக்குவித்திடவும் அதேவேளை தங்க நகை அடகுச் சேவை நடவடிக்கைகளுக்கும் மக்கள் வங்கி 1963ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்தது. அரச வங்கியொன்றின் பாதுகாப்புடன் சாதாரண வட்டி வீதங்களுடன் தங்க நகை அடகுச் சேவைகள் செயற்படுவதால் அதுவரையில் முறையற்ற விதத்தில் செயற்பட்ட தங்க நகை விற்பனைச் சந்தை சரியான முறையில் செயற்படத் தொடங்கியது.

இன்று மக்கள் வங்கியானது 3 ட்ரில்லியனுக்கும் அதிகமான சொத்துப் பெறுமதியைக்கொண்டுள்ள இலங்கையின் மிகப் பெரிய நிதி நிறுவனமாகும். நாடு முழுவதும் 743 கிளைகளுடன் வியாபித்திருக்கும் மக்கள் வங்கி, நாடு முழுவதும் 268இற்கும் அதிகமான மக்கள் வங்கி சுய வங்கிச்சேவை அலகுகளையும் கொண்டுள்ளது. அவற்றினூடாக வருடத்தின் 365 நாட்களும், கிழமையின் 7 நாட்களும், நாளாந்தம் 24 மணிநேரமும் வங்கிக் கிளையொன்றுக்கு செல்லாமலேயே மிகவும் இலகுவாக மற்றும் வினைத்திறன்மிகு வங்கி அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. 14 மில்லியனுக்கும் அதிகமான மொத்த வாடிக்கையாளர் எண்ணிக்கையையும் கொண்டுள்ளதுடன், இது இலங்கையில் ஒரு வணிக வங்கி கொண்டுள்ள மிகப்பெரிய அளவிலான வாடிக்கையாளர் எண்ணிக்கையாகும். இவ்வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக 8000இற்கும் அதிகமான ஊழியர்களையும் மக்கள் வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

அதேபோல் மக்கள் வங்கி தமது வாடிக்கையாளர்களுக்கு நவீன உலகுக்கேற்ற வகையிலான மிகவும் வசதியான, பாதுகாப்பான மற்றும் வினைத்திறன் மிக்க வங்கிசேவைகளைப் பெற்றுக்கொடுத்திடும் நோக்கத்துடன் 2015ஆம் ஆண்டு டிஜிட்டல் வங்கிச்சேவைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. அதனடிப்படையில் வங்கியின் அடிமட்டத்திலிருந்து உயர்மட்டம் வரை அனைத்து செயற்பாட்டுப் பிரிவுகளும் உள்ளடங்கிடும் வகையில் முழுமையான டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட திட்டமொன்று நடைமுறைப்படுத்திட நடவடிக்கை எடுத்துள்ள இலங்கையின் முதலாவது வங்கியாகவும் மக்கள் வங்கி விளங்குகிறது.

# ‘ஒரே நாடு-ஒரே சட்டம்’ செயலணியின் பரிந்துரைகள்



இலங்கையில் தன்பாலின உறவு கொள்வதற்கு அனுமதி வழங்குதல், யுத்தக் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்தல், மதமாற்றத்தை தடை செய்தல் உள்ளிட்ட பல்வேறு பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை, ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளது.

கொழும்பு, கோட்டை பகுதியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரரினால் இந்த அறிக்கை, ஜனாதிபதியிடம் நேற்றுமுன்தினம் (29) முற்பகல் கையளிக்கப்பட்டது.

இலங்கையில் ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ என்ற கருத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில், பல்வேறு தரப்பினரின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை பெற்று, இலங்கைக்கு தனித்துவமான கருத்தியல் கட்டமைப்பொன்றை உருவாக்குவது தொடர்பிலான ஆலோசனைகளை வழங்குவதற்கு ஜனாதிபதியினால் 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 மற்றும் 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆகிய திகதிகளில் அதிவிசேட வர்த்தமானி ஊடாக இந்த செயலணி ஸ்தாபிக்கப்பட்டது.

தொழில் வல்லுநர்கள், அரசு சாரா அமைப்புகள், மதக் குழுக்கள், பல்வேறு இனக்குழுக்கள், பல்கலைக்கழக சமூகம் மற்றும் சட்ட வல்லுநர்கள் உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் 1,200இற்கும் அதிகமான சாட்சிகளை உள்ளடக்கிய 43 பரிந்துரைகளுடனான 8 அத்தியாயங்களைக்கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

தன்பாலின உறவுகொள்தல் மற்றும் தனிபாலின திருமணம் ஆகியவற்றிற்கு தற்போது தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தன்பாலின உறவுகொள்வதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு, ‘ஒரே நாடு - ஒரு சட்டம்’ ஜனாதிபதி செயலணி, தமது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.

எனினும், தன்பாலின திருமணத்திற்கு அனுமதி வழங்கக்கூடாது என பரிந்துரை செய்துள்ள ஜனாதிபதி செயலணி, அவ்வாறு தன்பாலின திருமணத்திற்கு அனுமதி வழங்கினால், அது தன்பாலின உறவுகளை ஊக்குவிக்க வழிவகுக்கும் என சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், யுத்தக் குற்றங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் உள்ளிட்ட தரப்பினர் மற்றும் இராணுவத்தினரை உரிய புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ், ஜனாதிபதி பொது மன்னிப்பில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

யுத்தக் குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு தம்மால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சாதகமான பதிலை வழங்கியதாக ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ செயலணி பரிந்துரைத்தவை எவை?

1. அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகளின் தேர்தல்களுக்குப் பயன்படுத்தும் நிதி, எங்கிருந்து கிடைத்தது என்பது தொடர்பில் ஆராய்ந்து, கணக்காய்வு செய்வதற்கு புதிய சட்டமொன்று எதிர்வரும் தேர்தலுக்கு முன்னதாக உருவாக்கப்பட வேண்டும்.

2. நீதிமன்ற நடவடிக்கையின் ஊடாக குற்றவியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளவர்களின் வழக்கு விசாரணைகள் நிறைவுபெறும் வரை, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சுப் பொறுப்புகளை அவர்களுக்கு வழங்காத வகையில் புதிய சட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும். குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்களை மக்கள் பிரதிநிதிகளாக, மக்களே தெரிவுசெய்யும் பட்சத்தில், அவர்களை உறுப்பினர் பதவியில் மாத்திரம் இருக்க அனுமதி வழங்க முடியும்.

3. அரசியல்வாதிகளின் சொத்து விபரங்கள் தொடர்பிலான கணக்காய்வுகளை நடத்துவதற்கு, கணக்காய்வு ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரத்தை வழங்கவேண்டும். அரசியல்வாதிகளின் சொத்துகள் குறித்த தகவல்களை பொதுமக்களுக்கும் காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட வேண்டும்.

4. மதங்களின் சுதந்திரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில், மதமாற்று நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கும் புதிய சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

5. தன்பாலின உறவுகொள்வது தவறு என குற்றவியல் கோவை சட்டத்தின் ‘365 அ’ சரத்தில் உள்ளது. அந்த சரத்தை குற்றவியல் கோவை சட்டத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். எனினும், தன்பாலின திருமணத்திற்கு அனுமதி வழங்கக்கூடாது என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

6. திருநங்கை சமூகத்தின் பாலினம், சமூக அந்தஸ்து ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளும் வகையிலான அடையாள சான்றிதழ் ஒன்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கையில் திருநங்கை சமூகம், சட்டத்திற்கு அமைவாக தற்போது ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில், அவர்களை ஏற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேணடும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

7. திருநங்கை சமூகத்தின் நலத்திட்டத்திற்கு, அரச தலையீட்டில் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

8. யுத்தக் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டுள்ள இராணுவம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலி தரப்பினரை சமூகமயப்படுத்தும், புனர்வாழ்வுத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு, அவர்கள் ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட வேண்டும். (இந்த குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள், சமூகமயப்படுத்தலின்போது, சமூகத்தில் வாழக்கூடியவர்கள் என்பதை புனர்வாழ்வு நடவடிக்கைகளின்போது உறுதிப்படுத்தியதன் பின்னரே விடுவிக்க வேண்டும்)

9. நீதிமன்ற நடவடிக்கைகளை ஒளி மற்றும் ஒலி வடிவில் பதிவு செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

10. மொழி, இனம் என்ற அடிப்படையில் அரசியல் கட்சிகளை பதிவுசெய்ய அனுமதி வழங்கக்கூடாது. அவ்வாறு பதிவுசெய்யப்பட்டுள்ள கட்சிகளின் பெயர்களை மாற்றுவதற்கு காலஅவகாசம் வழங்கி, கட்சிகளின் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு கட்சிகளின் பெயர்களை மாற்றாத பட்சத்தில், கட்சியை தடைசெய்ய வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

11. நீதிமன்ற அவமதிப்பு குறித்த தண்டனைக்கான காலம் உள்ளிட்ட விடயங்களை நிர்ணயம் செய்யும் வகையிலான புதிய சட்டமொன்று கொண்டுவரப்பட வேண்டும்.

12. கல்வி அமைச்சின் விடயதானங்களுக்கு அமைய, அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி கற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (இலங்கையில் சில குழந்தைகள் மதம் சார்ந்த கல்வியை மாத்திரம் கற்பதை தவிர்த்து, 16 வயதுவரை கல்வி அமைச்சின் விடயதானங்களுக்கமைய, பாடசாலை கட்டாய கல்வி அவசியம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கட்டாய கல்விக்கு மேலதிகமாக வேறு கல்விகளை கற்க முடியும்)

13. விற்பனை நிலையங்களில் ஹலால் பொருட்களுக்கு வேறு பிரிவொன்றை ஆரம்பிக்க வேண்டும். (2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான கண்காணிப்பு குழுவொன்றினால் முன்வைக்கப்பட்ட அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.)

14. பொது இடங்களில் முழுமையாக முகத்தை மூடும் வகையில் ஆடை அணிவதற்கு தடை விதிக்க வேண்டும்.

15. ஜாதியை வெளிப்படுத்தி ஊடகங்களில் விளம்பரம் பிரசுரிப்பதற்கு தடை விதிக்க வேண்டும்.

16. விசேட தேவையுடையவர்களின் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சட்டத்திற்கு அமைவானதாக விசேட தேவையுடையவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய சட்டமொன்று கொண்டுவரப்பட வேண்டும். விசேட தேவையுடைவர்களுக்கான தற்போது காணப்படுகின்ற பிரத்தியேக பாடசாலைகளை தவிர்த்து, அவர்களை ஏனைய மாணவர்களுடன் கல்வி கற்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

17. ஆதிவாசி சமூகத்தின் கலாசாரத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வன பாதுகாப்பு கட்டளை சட்டம் திருத்தப்பட வேண்டும். (ஆதிவாசிகள் வனப் பகுதிக்கு சென்றால், தற்போது கைதுசெய்வதற்கான அதிகாரம் பாதுகாப்புப் பிரிவிற்கு உள்ளது). இந்த கட்டளை சட்டம் திருத்தப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆதிவாசிகளுக்கான அதிகாரசபையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

18. கைதிகளுக்கான சுகாதாரம், இடவசதி, உணவு போன்ற விடயங்களை உறுதிசெய்து, ஐக்கிய நாடுகள் சபையின் கைதிகள் தொடர்பிலான சட்டத்தைப் பின்பற்றி, சிறைச்சாலைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

19. தந்தை தமது சொத்துகளை பிள்ளைகளுக்கு கையளிக்காது உயிரிழக்கும் பட்சத்தில், அந்த சொத்து மூத்த ஆண்பிள்ளைக்கு சேரும் என்று சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவந்து, மூத்த பிள்ளைக்கு சொத்துகள் சேர வேண்டும் என்பதை உறுதிப்படுத்துமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

20. தனது கணவர் உயிரிழக்கும் பட்சத்தில், இஸ்லாமிய பெண்களுக்கு 4 மாதங்கள், 10 நாட்களுக்கு வழங்கப்படும் விடுமுறை தொடர்பான சட்டம் திருத்தப்பட்டு, மத வேறுபாடுகள், கணவர் அல்லது மனைவி என்ற வேறுபாடுகளின்றி, ஒரு மாத கால விடுமுறை வழங்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. வருடமொன்றில் வழங்கப்படும் விடுமுறைகளில் இந்த விடுமுறை உள்வாங்கப்பட வேண்டும்.

21. மீண்டும் இணைந்து வாழ முடியாது என இரண்டு தரப்பினரும் இணக்கம் தெரிவிப்பார்களாயின், அவர்களுக்கு விவாகரத்தை வழங்கும் வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (தவறான நடத்தை மற்றும் பாலியல் பிரச்சினைகளுக்கு மாத்திரமே தற்போது விவாகரத்து செய்ய அனுமதிக்கப்படுகின்றது என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.)

22. தேசவழமை சட்டம், முஸ்லிம் சட்டம், மலைநாட்டு சட்டம் ஆகியன முழுமையாக நீக்கப்பட்டு, பொது சட்டத்தின் கீழ், அந்த சட்டங்கள் உள்வாங்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணியினால் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கையை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சரவை, நாடாளுமன்றத்தில் சமர்பித்து, அதற்கான அனுமதிகளைப் பெற இணக்கம் தெரிவித்ததாக ஜனாதிபதி செயலணி தெரிவிக்கின்றது. -

நன்றி பிபிசி

## இலங்கைக்கு மருந்துப்பொருட்கள் நன்கொடை



மருந்துப்பொருட்களுக்கான வேண்டுகோளுக்கு பிரதிபலிக்கும் முகமாக மலேசியாவிலுள்ள பல பௌத்த மற்றும் மத அமைப்புகள் இலங்கைக்கு அவசர மருந்து மற்றும் மருத்துவப் பொருட்களை நன்கொடையாக வழங்கின.

சி ஹூய் டாங் - கோலாலம்பூரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கரீன் கியோங் அம்மணி, மலேசியாவின் யயாசன் சின் செவ் மற்றும் பெஸ்ட் விஷ்ஸ் அறக்கட்டளையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திருமதி சிவ் நியோக் செவ் மற்றும் ப்லியா மற்றும் போ குவாங் ஷான் மலேசியாவின் தலைமை மடாதிபதியான வென் ஜூ செங்க் ஆகியோர் 54046.26 அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்துப் பொருட்களை மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகரிடம் எயார் சீஃப் மார்ஷல் (ஓய்வுபெற்ற) சுமங்கல டயஸிடம் 2022 ஜூன் 14ஆம் திகதி சான்சரி வளாகத்தில் வைத்து கையளித்தார். இந்த சரக்கு 2022 ஜூன் 20ஆம் திகதி கோலாலம்பூரிலிருந்து கொழும்புக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸால் அனுப்பப்பட்டது.

இந்த பொருட்களை கையளிக்கும் நிகழ்வில் பிரதி உயர்ஸ்தானிகர் திருமதி டிலானி வீரகோன் மற்றும் இரண்டாம் செயலாளர் (வர்த்தகம்) செல்வி மேகலா அபேகோன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ஹாஷிம் ஹாஜியாரின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்

### பாக்கிர் மாக்கார் எம்.பி. அனுதாபம்

*( பீ.எம் முக்தார் )*

சீனன்கோட்டையைச் சேர்ந்த இரத்தினக்கல் வர்த்தகரும் முன்னணி சமூக சேவையாளருமான முஹம்மத் ஹாஷிம் ஹாஜியாரின் மறைவு சீனன்கோட்டை பகுதிக்கு மாத்திரமின்றி முழு பேருவளை பகுதிக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் - என நாடாளுமன்ற உறுப்பினர் அல்-ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் கூறியுள்ளார்.

அவரின் அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


அவர் தனது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, மர்ஹூம் முஹம்மத் ஹாஷிம் ஹாஜியார் பேருவளை ஜாமிய்யா நளீமிய்யா, சீனன்கோட்டை ஸகாத் கமிட்டி, சீனன்கோட்டை அஸ்ஸலாஹ் அரபிக் கல்லூரி மற்றும் சீனன்கோட்டை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை ஆகியவற்றின் நிர்வாக மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராக நீண்ட காலம் பதவி வகித்து அவற்றின் முன்னேற்றத்திற்காக பல தாசாப்த காலமாக மிகவும் அர்ப்பணிப்புடன் பங்பாற்றியதை எம்மால் ஒருபோதும் மறக்கமுடியாது.

இவரது தந்தை மர்ஹூம் ஐ.எல்.எம் ஸம்ஸுதீன் பேருவளை மஹகொடை பகுதி உட்பட ஏனைய பகுதிகளின் கல்வி முன்னேற்றத்திற்காக உழைத்தவர். அவரைப் போல் மர்ஹூம் முஹம்மத் ஹாஷிம் ஹாஜியாரும் பிரதேச கல்வி, சமய மறுமலர்ச்சிக்காக மிகவும் அமைதியாக மாபெரும் பணிகளை செய்தவராவார். இவரது தந்தையின் கல்விப் பணிகளை கௌரவித்து மஹகொடை பாடசாலைக்கு ஐ.எல்.எம். ஸம்ஸுதீன் மகாவித்தியாலயம் என எனது தந்தையின் முயற்சியால் பெயர்சூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



எனது தந்தையான முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் எம்.ஏ.பாக்கிர் மாக்காருடனும் என்னுடனும் மிக நெருக்கமாக செயல்பட்ட இவர் அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலையை கட்டியெழுப்ப அரசாங்கத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடிந்த அனைத்து உதவிகளையும் அரசியல்வாதிகள் மூலம் சாதித்தார். அல்-ஹுமைஸரா பாடசாலையை முன்னணிப் பாடசாலையாக மாற்றியமைக்க அவ்வப்போது சிறந்த அதிபர்களையும் ஆசிரியர்களையும் தேடி பெற்றுக்கொள்ள பல்வேறு பகுதிகளுக்கும் சென்று அதனையும் சாதித்ததை சீனன்கோட்டை மக்கள் ஒருபோதும் மறக்கமுடியாது.

ஐக்கிய தேசிய கட்சி தீவிர ஆதரவாளரான எனது அரசியல் முன்னேற்றத்திற்கும் இவர் செய்த பங்களிப்பை என்றும் மறக்கலாகாது. மிகவும் அமைதியாக, நற்பண்புகளுடன் சமூகத்திற்கு பணிசெய்த அன்னாரது நற்கருமங்களை அல்லாஹ் அங்கீகரித்து ஜென்னதுல் பிர்தௌஸ் எனும் சுவனம் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.



# பாகிஸ்தானில் தெற்காசிய விளையாட்டுப் போட்டி



2023ஆம் ஆண்டு தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் நடத்தப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்கத்தின் (POA) பிரதிநிதிகள் முன்மொழிந்துள்ளனர். தெற்காசிய ஒலிம்பிக் கவுன்சிலின் (SAOC) நிர்வாகக் குழு கூட்டத்தில் இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவுகள், பூட்டான், இலங்கை ஆகிய ஏழு உறுப்பினர் தேசிய ஒலிம்பிக் கமிட்டிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட SAOC கூட்டத்தில் முன்மொழியப்பட்ட திகதிகள் குறித்த உடன்பாடு எட்டப்பட்டதாக அதே வெளியீடு தெரிவித்துள்ளது.

லாகூர், இஸ்லாமாபாத், சியால்கோட், பைசலாபாத், குஜ்ரன்வாலா ஆகிய நகரங்களில் போட்டிகளை நடத்த முடிவு செய்யப்பட்டது. 1989, 2004 இல் இஸ்லாமாபாத்தில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# ரொமேலு லுகாகு இன்டர் மிலனுக்குத் திரும்பினார்

ரொமேலு லுகாகு, செல்சியாவிலிருந்து தனது சீசன்-லான் லோன் நகர்வை முடித்த பிறகு, வாங்கவேண்டிய கட்டாயம் இல்லாமல், அதிகாரப்பூர்வமாக மீண்டும் ஒரு இன்டர் மிலான் வீரரானார்.

ஸ்குடெட்டோவில் வெற்றி பெற்றால், செல்சியாவிற்கு 6.9m மற்றும் போனஸாக 3.5m கடன் கட்டணமாக இன்டர் செலுத்தும், மேலும் இந்த சீசனில் அவனது ஊதியம் அனைத்தையும் ஈடுசெய்யும்.

திரும்பி வந்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என்றார் அவர்.
மருத்துவப் படிப்பை முடித்த லுகாகு புதிய இன்டர் பிளேயராக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டார். ரொமேலு லுகாகு 95 போட்டிகளில் 64 கோல்கள் அடித்துள்ளார்

நகர்வு உறுதிசெய்யப்பட்ட பிறகு, கடந்த கோடையில் அவர் வெளியேறிய பிறகு அவர் இன்டர் கோச் சிமோன் இன்சாகியுடன் தொடர்பில் இருந்ததாகவும், திரும்பி வந்ததில் மகிழ்ச்சியடைவதாகவும் லுகாகு வெளிப்படுத்தினார்.

திரும்பி வருவதற்கு அவரை நம்பவைத்தது எது என்று கேட்டதற்கு, அவர் கூறினார்: "ரசிகர்கள் மற்றும் எனது அணி வீரர்களின் பாசம். ஆனால், பயிற்சியாளருடன் பணிபுரியும் வாய்ப்பும் உள்ளது. கடந்த சீசன் முழுவதும் நான் அவருடன் தொடர்பில் இருந்தேன். பயிற்சியாளர் சிறப்பாக செயல்படுகிறார் என்று நான் நினைக்கிறேன். நான் இந்த கிளப்பிற்கு பங்களித்து நல்லது செய்ய விரும்புகிறேன்.

"வீட்டிற்கு வருவதுபோல் உள்ளது. மக்கள், ரசிகர்கள் மற்றும் எனது அணியினருக்கு நன்றி. எனது குடும்பத்தினரும் நானும் மிலனில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தோம் என்று நினைக்கிறேன். நான் இங்கு வந்த முதல் நாளிலிருந்து அனைவரும் எனக்கு நிறைய உதவினார்கள், நான் உண்மையிலேயே சந்தோஷமாக இருக்கிறேன்.

"நான் இங்கிலாந்துக்கு சென்றபோது என் வீட்டை விட்டுக் கூட வெளியேறவில்லை, இது நான் இங்கு திரும்பி வந்ததில் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்பதைக் காட்டுகிறது. இப்போது ஆடுகளத்தில் இருக்கும் தோழர்களைப் பார்க்க விரும்புகிறேன்."

லுகாகு இப்போது இன்டர் உடனான தனது முந்தைய வெற்றிகளைக் கட்டியெழுப்ப நம்புகிறார், அவர் AC மிலனுக்கு இரண்டாம் இடத்தைப் பிடித்தார் மற்றும் கடந்த சீசனில் அவர் இல்லாமல் கோப்பா இத்தாலியாவை வென்றார்.

நிதி விதிமுறைகள் தொடர்பாக செல்சியாவுடன் சிக்கலான பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு ஒப்பந்தத்தை முடித்ததற்காக லுகாகு ஜனாதிபதி ஸ்டீவன் ஜாங்கிற்கு நன்றி தெரிவித்தார்.





# ஜேமி முர்ரேவுடன் இணைகிறார் வீனஸ் வில்லியம்ஸ்

டென்னிஸ் புயல் வீனஸ் வில்லியம்ஸ் விம்பிள்டன் கலப்பு இரட்டையர் பிரிவில் ஜேமி முர்ரேவுடன் ஜோடி சேர்ந்து விளையாடவுள்ளார். வீனஸ் வில்லியம்ஸ் ஜோடி தாமதமாக வைல்ட் கார்ட் நுழைவு ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு விம்பிள்டனில் களமிறங்குகிறார்.

ஒகஸ்ட் 2021க்குப் பின்னர் வீனஸ் வில்லியம்ஸ் விளையாடவில்லை. முர்ரே விம்பிள்டனில் இரண்டு முறை கலப்பு இரட்டையர் பிரிவில் வென்றுள்ளார் - 2007இல் ஜெலினா ஜோன்கோவிச், 2017 இல் மார்டினா ஹிங்கிஸ் உடன் சம்பியனானார்.

வில்லியம்ஸ் 2006இல் பொப் பிரையனுடன் இறுதிப் போட்டிக்கு வந்தார். SW19இல் அவர் பெற்ற ஐந்து ஒற்றையர் பட்டங்களுக்கு இணையாக அவர் தனது சகோதரி செரீனாவுடன் இணைந்து பெண்கள் இரட்டையர் பிரிவில் ஆறு முறை வென்றுள்ளார்.



ஆண்டி முர்ரே ,செரீனா வில்லியம்ஸ் ஜோடி 2019 விம்பிள்டனில் கலப்பு இரட்டையர் பிரிவில் மூன்றாவது சுற்றை எட்டியது.

# நொதேன் பிரிமியர் லீக் – 2022



(இ.சு.முரளிதரன்)

யாழ்ப்பாணத்தின் கல்வியங்காடு புளூ விளையாட்டுத்திடலில் வடக்கின் முதன்மை சுற்றுப்போட்டியில் வட ஸ்ரைக்கார் அணி சம்பியனானது. 13 அணிகள் பங்கேற்ற 10 ஓவர் போட்டி சுவாரஸ்யமாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்றது.

தகுதிச் சுற்றுகளில் வெற்றியீட்டிய வட ஸ்ரைக்கார் அணியும் கொக்குவில் ஸ்ரார் அணியும் இறுதிப் போட்டித் தகுதிபெற்றன. இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வட ஸ்ரைக்கார் அணி 10 ஓவர்களில் 101 ஓட்டங்களைக் குவித்தது.

102 வெற்றி இலக்குடன் துடுப்பொடுத்தாடிய கொக்குவில் ஸ்ரார் அணி 72 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுத் தோல்வி கண்டது. வட ஸ்ரைக்கார் அணியில் பிரதீப் 46 ஓட்டங்களையும் உமைசுதன் 28 ஓட்டங்களையும் பெற்று அணியின் வெற்றிக்கு உதவினர்.
வடபுலத்தின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரரான சுகந்தன் வட ஸ்ரைக்கார் அணியின் கப்டனாவார். இவரின் தலைமையில் களமிறங்கும் அணியின் சாதனையை வடபுல துடுப்பாட்ட ரசிகர்கள் நன்கறிவர். சுகந்தனின் நேர்த்தி மிகு வழிநடத்தலால் நொதேன் பிரிமியர் லீக் கிண்ணம்வட ஸ்ரைக்கார் வசமானது. அதிக ஓட்டங்களைக் குவித்த பிரதீப் போட்டியின் சிறந்த வீரர் விருதைப் பெற்றார்.

# இரண்டாம் வார போட்டிகள் இன்று ஆரம்பம்

POINTS TABLE
DIV I – SEGMENT A – WEEK I

| GROUP 1A | P | W | D | L | PF | PA | BP | TP |
|---|---|---|---|---|---|---|---|---|
| ST. JOESPEH'S COLLEGE | 1 | 1 | 0 | 0 | 34 | 3 | 1 | 6 |
| ROYAL COLLEGE | 1 | 1 | 0 | 0 | 22 | 12 | 1 | 6 |
| TRINITY COLLEGE | 1 | 1 | 0 | 0 | 20 | 13 | 0 | 5 |
| S. THOMAS' [illegible] | 1 | 0 | 0 | 1 | 13 | 20 | 1 | 1 |
| ST. ANTHONY'S COLLEGE | 1 | 0 | 0 | 1 | 12 | 22 | 0 | 0 |
| KINGSWOOD COLLEGE | 1 | 0 | 0 | 1 | 3 | 34 | [illegible] | 0 |

POINTS TABLE
DIV I – SEGMENT A – WEEK I

| GROUP 2 A | P | W | D | L | PF | PA | BP | TP |
|---|---|---|---|---|---|---|---|---|
| WESLEY COLLEGE | 1 | 1 | 0 | 0 | 38 | 7 | 1 | 6 |
| ST. PETER'S COLLEGE | 1 | 1 | 0 | 0 | 27 | 12 | 1 | 6 |
| ISIPATHANA COLLEGE | 1 | 1 | 0 | 0 | 18 | 9 | 0 | 5 |
| DHARMARAJA COLLEGE | 1 | 0 | 0 | 1 | 12 | 27 | 0 | 0 |
| SCIENCE COLLEGE | 1 | 0 | 0 | 1 | 9 | 18 | 0 | 0 |
| VIDYARTHA COLLEGE | 1 | 0 | 0 | 1 | 7 | 38 | 0 | 0 |

இரு வருடங்கள் தடைப்பட்டிருந்த இலங்கையின் டயலொக் பாடசாலை ரக்பி லீக் - 2022 போட்டிகள் கடந்த வாரம் ஆரம்பமான நிலையில் இன்றைய தினம் இரண்டாவது வார போட்டிகள் ஆரம்பமாகின்றன.

முதல் வாரத்தில் மொத்தமாக 6 போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் கொழும்பு புனித ஜோசப் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது. அதனைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இரு போட்டிகளில் கொழும்பு இஸிப்பத்தான கல்லூரியும், கொழும்பு, ரோயல் கல்லூரியும் வெற்றிபெற்றன. சனிக்கிழமை நடைபெற்ற போட்டிகளில் ட்ரினிட்டி கல்லூரி, சென். பீட்டர்ஸ் கல்லூரி மற்றும் வெஸ்லி கல்லூரி ஆகிய வெற்றிபெற்றன.

இந்நிலையில், இரண்டாம் வாரத்திற்கான போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. இன்று நடைபெறும் இரு போட்டிகளில் சென். அந்தோனி – ட்ரினிட்டி கல்லூரிகளும், வெஸ்லி - இஸிப்பத்தான கல்லூரிகளும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

முதல் 12 அணிகள் 34 போட்டிகளில் கலந்துகொள்ள வுள்ளன. இதனையடுத்து, எட்டு வாரங்களின் பின்னர் டயலொக் பாடசாலை ரக்பி நொக்அவுட் போட்டிகள் இலங்கை பாடசாலைகள் ரக்பி சம்மேளனத்தின் ஏற்பாட்டின் கீழ் தொடர்ந்து நடைபெறும்.

Dialog
SCHOOLS
RUGBY

# இலங்கையின் சுழலில் சரிந்த ஆஸி.யின் முக்கிய விக்கெட்டுகள்





சுற்றுலா அவுஸ்திரேலிய - இலங்கை அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் 2ஆவது நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் இரு விக்கெட்டுகள் கைவசம் இருக்கும் நிலையில் இலங்கை அணியை விட 101 ஓட்டங்கள் முன்னிலை வகிக்கிறது.

முன்னதாக தங்களது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 212 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்த நிலையில் பதிலுக்கு ஆடிவரும் அவுஸ்திரேலிய அணி நேற்றைய நாள் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 313 ஓட்டங்களை பெற்றது. நேற்று போட்டியின் 2ஆவது நாள் ஆட்டம் தாமதமாகியே ஆரம்பமானது. மைதானத்தில் வீசிய பலத்த காற்றுடனான மழை காரணமாக போட்டி பிற்பகல் 1.35 மணியளவிலேயே ஆரம்பமானது.

தேநீர் இடைவேளைக்காக போட்டி இடைநிறுத்தப்படுகின்றபோது அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 233 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. உஸ்மான் கவாஜா 77 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். பின்னர் தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலிய அணியில் கெமரூன் கிரீன் 77 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். பெட் கமின்ஸ் 26 ஓட்டங்களுடனும், நைதன் லயன் 28 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இலங்கை அணியின் பந்து வீச்சில் ரமேஷ் மெண்டிஸ் 4 விக்கெட்டுகளையும், ஜெப்ரி வெண்டர்சே 2 விக்கெட்டுகளையும், தனஞ்ஜய ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர். இன்று போட்டியின் 3ஆவது நாள் ஆட்டம் தொடரவுள்ளது.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7